# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,923—1970 සැප්තැම්බර් 11 වැනි සිකුරාදා—1970.9.11

14,923 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்யக்கூடியதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 817 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 844 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. . | 846 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் . | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 849 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் ச. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேற

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்.
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
கொழும்பு,
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.*

வதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற் ருத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவை யாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பன வற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவைக் ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No. AB. 60/X. 2273/70

## வளிமண்டல ஆய்வுத் திணைக்களம்

### பதவி : வளிமண்டலவியலாளர்

வளிமண்டல ஆய்வுத் திணைக்களத்திலுள்ள வளிமண்டலவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்கசேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின் வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1970.9.25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1970.10.2.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர், தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவுக்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :—

(அ) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டதுமாகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருடகாலம் தகுதிகாண் நிலையில் சேவையில் அமர்த்தப்படுவர்.

(ஆ) கடமைகளுள் வளிமண்டல ஆய்வு, வானியல், கடிகாரவியல், பூமிநடுக்கவியற்கான வழுவிற் கருவிகளின் உபயோகங்களும், வளிமண்டல ஆய்வு அவதானிப்புகள் மற்றும் வேறு அவதானிப்புகளின் கணிப்பு, சரிபார்த்

தல், அட்டவணைப்படுத்தல் சம்பந்தப்பட்ட புள்ளிவிபர வேலைகளும், காலநிலை முன்னறிவிப்புப்பணியும் உட்பட்டிருக்கும்.

(இ) கடமை நேரங்கள் இரவிலும், நோன்மதி நாட்களிலும், அரசாங்க விடுமுறை நாட்களிலும் இருப்பினும், அதற்கென மேலதிகக் கொடுப்பனவு நடைபெறமாட்டாது. அரசாங்க விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்காகப் பதில் விடுதலை அனுமதிக்கப்படும்.

(ஈ) நியமிக்கப்பட்டவர். தேவைப்படின் காலநிலை முன்னறிவிப்பிலும், அதைச்சார்ந்த பாடங்களிலும் வெளிநாட்டில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தில் பயிற்சி நெறி பெறவேண்டும். நியமிக்கப்பட்டவர் வெளிநாட்டில் படிப்பு நெறியை மேற்கொள்வதற்குரிய உடல் மனநிலை உடையவரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலும் மருத்துவச் சோதனையில் தகுதி காணல் வேண்டும். பயிற்சி பெற நாட்டை விட்டுப் போகுமுன் ஒரு பிணையும், உடன்படிக்கையும் செய்யுமாறு வேண்டப்படுவர்.

3. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பளம் பின்வருமாறு :— வருடச்சம்பளம் ரூபா 6,720 இல் ஆரம்பமாகி, வருடம் ரூபா 360 கொண்ட 12 உயர்வுகளும், வருடம் ரூபா 480 கொண்ட 11 உயர்வுகளுடன் வருடச்சம்பளம் ரூபா 16,320 வரை செல்வதுடன், வருடச்சம்பளம் ரூபா 11,040 க்கும், ரூபா 11,100 க்கும், மூன் விளைத்திறமைகாண் தடைகளுமுண்டு.

குறிப்பு.—ஆண்டுக்கு ரூபா 11,040 சம்பளம் அடைவதற்குமுன் தகுதிகாண் நிலையிலிருந்து மேற் செல்வதாயின் கட்டாயமாகக் குறிப்பிட்ட மேற்பட்டதாரி அல்லது டிப்ளோமா பட்டம் பெற வேண்டும்.

4. தேவையான தகைமைகள் :—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காண்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.9.25 தேதியில் 20 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில், முதலாவது அல்லது இரண்டாவது பிரிவில், முக்கிய பாடமாக பௌதிகம் அல்லது கணித பாடத்தில் விசேட பட்டதாரியாக இருக்க வேண்டும், அல்லது தகுதியான மேற்பட்டதாரித் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழக பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(I) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(II) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எவினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்கசேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('ஆ' எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ('அ' எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.9.4.

9-479/1—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

No. A 25/X 2273/70.

## கல்வி அமைச்சு

### கல்விப் பணிப்பாளர் தரம் I இற்கான பதவி

கல்வி அமைச்சிலுள்ள கல்விப் பணிப்பாளர் தரம் I இதற்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இவ் அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்றுப் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகச் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக் குழு, த.பெ. என் 500, கொழும்பு 1, எனும் விலாசதாரருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1970.9.25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.10.2.

குறிப்பு.—(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சலில் வேண்டுவோர், தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9" X 4" அளவிற்குக் குறையாததும், முத்திரையிடப்படாததுமான கடித உறையொன்றைத் தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராய், வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா, அல்லரா என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரை காத்திருப்போர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பியிடத்து விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வதியும் நாட்டுக்குரிய அன்றேல் அந் நாட்டிற்கு மிகக்கிட்ட உள்ள இலங்கைப் பிரதி நிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடலமுடையவரா என்பதை உறுதிப்படுத்துமுகமாக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர்.

அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தமது செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களே செலுத்துதல் வேண்டும்.

2. நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.—இளைப்பாற்றுச் சம்பள நியதிகளின் கீழ் இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். பெண் ஒருவர் நியமனம் பெறுமிடத்து, அவர் சேமலாப நிதி நலன்களுக்கு அருகதையுடையவராவார். இதன்பொருட்டு அவர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு 5 வீத சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும். நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான அரசாங்க சேவையில் இல்லாத ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, அவரின் வகை குறித்து அவர் மூன்று வருட பரீட்சார்த்த நிலையில், அல்லது தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார். பத்து வருட சேவை முடிவடையும் முன்னருள்ள எந்நேரத்திலும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் தான் சேமலாபநிதிக்குத் தொடர்ந்தும் கட்டணம் அளிக்க விரும்புகிறாரா, அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்திற்கு மாறுவதற்கு விரும்புகிறாரா எனத் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பள்ளிக்கூட ஆசிரியர்கள் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணங்களின் கீழ் சேவையில் இருந்தவர்கள் அல்லது உபகார நிதிப் பதவியில் கடமையாற்றியவர்கள், அல்லது இவை இரண்டிலும், ஏலவே 10 வருட கடமை புரிந்த பெண்களைப் பற்றிய விடத்து நியமனம் பெற்ற ஆறு மாதத்துள் தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. சம்பளம்.—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு—வருடாந்தம் ரூபா 18,840 தொடக்கம் 600 ரூபாவையுடைய இரு வருட ஏற்றங்களுடன் வருடாந்தம் ரூபா 20,040 வரை.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராக இருக்க வேண்டும்.

(ஆ) 1970.9.25 ந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். ஏலவே அரசினர் சேவையில் உள்ளோர்க்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமைவுறுது.

(இ) (i) கல்விப் பணிப்பாளர் தரம் II இல் ஒருவருடத்திற்குக் குறையாததெனக் கணிக்கக்கூடிய சேவையில் இருத்தல் அல்லது

(ii) கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றில் வருடத்திற்கு ரூபா 17,640/- இற்குக் குறையாத உயர் சம்பளத்தை உடையதான ஒரு திரட்டிய சம்பளத் திட்டத்தைக் கொண்ட பதவியொன்றில் மூன்று வருடத்திற்குக் குறையாததெனக் கணிக்கக்கூடிய சேவையில் இருத்தல் அல்லது, பல்கலைக்கழகத்தை ஒத்த நிலையமொன்றில் திரட்டல் சம்பளமாக வருடத்திற்கு ரூபா 14,880/- இற்கும் குறையாத சம்பளத்தைப் பெறுபவராக இருத்தல்.

குறிப்பு :—நியமனதாரி வினைத்திறமைத்தடைப் பரீட்சையிலும், கல்விச் சட்டத்தையும், அரசியல் விதி விதானங்களையும் கொண்ட திணைக்களப் பரீட்சையிலும் விலக்கு அளிக்கப்படாதுள்ள போதும், அவற்றிற் சித்தியெய்தாது இருப்பின் இப்பதவியை உறுதிப்படுத்துவதற்கு வேண்டப்படும் பிற தகைமைகளுடன் மேலே குறிப்பிடப்பட்ட வினைத்திறமைத்தடைப் பரீட்சையையும் மேலே கூறப்பட்ட திணைக்களப் பரீட்சைகளையும் நியமனம் பெற்ற ஒரு வருடத்துள் சித்தி எய்த வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில் அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும், அல்லது எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்கவேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம். (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ், அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம், அல்லது மிக உயர்ந்த கல்வித் தகுதிப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர்தொழிற்றகைமை, அல்லது தொழினுட்பத் தகைமை.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்கள்.

குறிப்பு:—1. விண்ணப்பப் படிவத்துடன் சாதனங்களேனும், சாதனங்களின் பிரதிகளேனும் இணைத்தல் கூடாது.

2. சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சேர்தூக்கப்படா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், தமது விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். இதன்பொருட்டு, விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) பயன்படுத்தலாம்.

7. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இவ் அரசிதழில (வர்த்தமானியில்) I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்க.

9. விண்ண்ப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் இவ் அலுவலகத்தில் அவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றிப் பதிலுரை வழங்கப்படும். இத்தேவைக்கமைய, ஒழுகத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்களுக்குப் பதிலுரை வழங்கப்படமாட்டாது.

இத் தேவைக்கு அமைய ஒழுகியும், விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பத்தின் பதிலுரை பெற்றுக்கொள்ளாவிடத்து, அதுபற்றி உடனே அரசாங்க சேவைக் குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ் ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் அபேட்சகர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கோரும் உரிமை எதையும் உடையவராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக் குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1970.9.4

9-479/2—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

No. A. 4/X 2274/70.

## கல்வி அமைச்சு

### பதவி : பிரதம வித்தியாதிபதி II ந் தரம்

கல்வி அமைச்சிலுள்ள பிரதம வித்தியாதிபதி II ஆந் தரம் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970. 9. 25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970. 10. 2.

குறிப்புகள் (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப், பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்: இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையவராவர். இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5 வீதம் செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம், காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும், ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. சம்பள விகிதம்.—

இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 14,400—3 × 480—2 × 600—ரூ. 17,040.

4. தேவைப்படும் தகைமைகள்.—

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970. 9. 25 ஆம் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) பிரதம வித்தியாதிகாரியாக மூன்று வருடங்களுக்குக் குறையாத சேவை அல்லது கல்வி ஆலோசகராக 5 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

அல்லது

(ii) ரூ. 16,300 க்குக் குறையாத தொகையை ஆகக்கூடுதலான வருடாந்தச் சம்பளமாகக் கொண்டு ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்டுள்ள ஒரு பதவியில் கல்வி அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தில் அல்லது நிலையத்தில் 3 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருப்பதுடன் ரூ. 12,480 க்குக் குறையாத ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பளத்தைப் பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு: வினைத்திறமைகாண் பரீட்சைகளிலும் கல்விச் சட்டம், அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலுமான திணைக்களப் பரீட்சையிலும் இருந்து நியமதாரி விலக்களிக்கப்பட்டிருந்தால் அல்லது இவற்றில் சித்தி எய்தியிருந்தாலன்றி, பதவியில் உறுதிப்படுத்தப்படுதற்கு, அவர் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் பரீட்சைகளிலும் குறித்த திணைக்களப் பரீட்சைகளிலும் நியமனத் திகதியிலிருந்து 1 வருடத்துக்குள் சித்தியடைய வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பி யனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணுயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1. 1970. 9. 4.

9-479/3—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

இல.: A 75/X 2275/70.

### கல்வி அமைச்சு

### பதவி : பிரதம வித்தியாதிகாரி

கல்வி அமைச்சிலுள்ள பிரதம வித்தியாதிகாரி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 1970.9.25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.10.2.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ் வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப் பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(I) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந் நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம் காரியத்துக்கேற்ப மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறுர் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ. 11,040—11×480—16,300. ரூ. 14,400 க்கு முன் வினைத் திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.9.25 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டதாரியாகவேனும் பயிற்றப்பட்ட பட்டதாரியாகவேனும் இருக்க வேண்டும்.

(ஈ) அரச கருமங்களின் நோக்கங்களின் பொருட்டு உபயோகிக்கப்படும் மொழி மூலம் சி. பா. த. பத்திர அல்லது க. பொ. த. (சாதாரணதர) பத்திர அல்லது யாதேனும் உயர்ந்த தராதரப் பத்திரப் பரீட்சையில் மொழி அல்லது இலக்கிய வினுப் பத்திரங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்

(உ) கல்வி ஆலோசகராக மூன்று வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது 1 ஆந் தர அதிபராக 5 வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது ஒரு கனிட்ட தொழினுட்ப நிலைய அதிபராக 5 வருடத்துக்குக் குறையாத சேவை அல்லது ஆசிரியர் கலாசாலை ஒன்றில் விரிவுரையாளராக 8 வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

குறிப்பு.—(i) பட்டம் பெற்ற வட்டார வித்தியாதிகாரியாகக் குறைந்தபட்சம் 7 வருட சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் பட்டம் பெற்ற வட்டார வித்தியாதிகாரியாக குறைந்தபட்சம் 5 வருடசேவை புரிந்த ஆசிரியர் தொழில் அத்துடன்/அல்லது வட்டார வித்தியாதிகாரிச் சேவையில் மொத்தம் 15 வருட சேவை புரிந்துள்ள வட்டார வித்தியாதிகாரிக்கும் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

(ii) கல்வி ஆலோசகர்களாக 3 வருட சேவை புரிந்துள்ள கல்வி ஆலோசகர்கள், பட்டம் பெற்றிருப்பினும் பெருவிடினும், இப்பதவிகளுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

(iii) நியமதாரி வினைத்திறமைகாண் பரீட்சைகளிலும் கல்விச் சட்டம், அரசாங்க விதிகளும் பிரமாணங்களும் ஆகியவற்றிலான திணைக்களப் பரீட்சையிலுமிருந்து விலக்கு அளிக்கப்பட்டிராவிடின், அல்லது இவைகளில் சித்தியடைந்திராவிடின் பதவியில் உறுதிப்படுத்தப்படுதற்கான ஏனைய விடயங்களுடன் விதிக்கப்படும் வினைத்திறமைகாண் பரீட்சைகளிலும் திணைக்களப் பரீட்சைகளிலும் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் சித்தியடைய வேண்டும்.

மு. கு.—(i) பயிற்றப்பட்ட பட்டதாரிகளென்பது உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருக்கும் நேரத்தில் பட்டம் பெற்றவர்களையும் பட்டம் பெற்றபின் பல்கலைக் கழகக் கல்வித் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவர்களையும் அல்லது உயர்தர பயிற்சி பெற்றவர்களையும் குறிக்கும்.

(ii) பட்டப்பின் பட்டம் பெற்றோர் என்பது பட்டம் பெற்ற பின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் கலை முதுமானி, கலாநிதி போன்ற பட்டம் பெற்றவர்களைக் குறிக்கும்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது. சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம். தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தி லுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத் தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பி. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500, காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1. 1970.9.4.

9-479/4—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

இல. A 76/X. 2276/70

கல்வி அமைச்சு

பதவி : கல்வி ஆலோசகர்

கல்வி அமைச்சிலுள்ள கல்வி ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றுக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.9.25.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.10.2.

குறிப்புகள்.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.— இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதிநலன்களுக்கு அவர் உரித்துடையவராவர் ; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம், காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின் நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு.—

ரூ. 8,160—8 × 360—2 × 480—12,000

ரூ. 9,960 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. தேவைப்படும் தகைமைகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்கவேண்டும்.

(ஆ) 1970.9.25 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை) அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாக இருக்க வேண்டும்.

குறிப்பு.—(i) சிறப்பு வகுப்பு பெற்ற பட்டதாரிகளுக்கும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கும் பட்டப்பின் தகைமை பெற்றுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) அரச கருமங்களின் நோக்கங்களின் பொருட்டு உபயோகிக்கப்படும் மொழி மூலம் சி. பா. த. பத்திர அல்லது க. பொ. த. (சாதாரண) பத்திர அல்லது யாதேனும் உயர்ந்த தராதரப் பத்திரப் பரீட்சையில் மொழி அல்லது இலக்கிய வினாப் பத்திரங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(உ) (i) பட்டம் பெற்ற வட்டார வித்தியாதிகாரியாக 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்; அல்லது

(ii) பட்டதாரி ஆசிரியராக குறைந்த பட்சம் 3 வருட சேவை உட்பட ஆசிரியராக அல்லது வட்டார வித்தியாதிகாரியாக அல்லது இவ்விரு சேவையிலும் 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்.

(iii) வட்டார வித்தியாதிகாரிகளாக 8 வருட சேவை புரிந்துள்ள வட்டார வித்தியாதிகாரிகள், பட்டதாரிகளாக இருப்பினும் இல்லாவிடினும் இப்பதவிகளுக்கு உரித்துடையராவர்.

குறிப்பு.—(ii) ஒரு கல்வி நிலையத்தின் அதிபராக நிர்வாக அனுபவம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கும் அல்லது கல்வித் துறையில் நிர்வாக அனுபவம் அல்லது கல்வி ஆராய்ச்சி வேலையில் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவமும் பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கும். (பட்டம் பெற்ற பின் பயிற்சி பெற்றவர்கள் தவிர) நியமன நியதிகளில் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் பரீட்சைகள் எதிலேனும் ஒன்றில் அல்லது கூடியவற்றில் சித்தி யெய்திய வட்டார வித்தியாதிகாரிகளுக்கும் முதன்மை அளிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகள், பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையத் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

எஸ். பீ. நாணயக்கார,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.9.4

9-479/5—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## இலங்கை அரச கடற்படை

### துணைமுகாரிப் பதவி—குடியியற் பொறியியல் (சிவில் எஞ்ஜினியரிங்)

இலங்கை அரச கடற்படையில் ஒரு (குடியியல் பொறியியல்) (சிவில் என்ஜினியரிங்) துணைமுகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—16 × 144—6,456 ஆகும்.

3. வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் அனுபவமும்.—

விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் தான் :

(அ) கனிட்ட தராதரப் பத்திர, அல்லது அதற்குச் சமமான, அல்லது அதனிலும் பார்க்க உயர்ந்த ஒரு பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளார் ; எனவும்,

(ஆ) நன்கு மதிக்கப்பட்ட ஒரு பொறியியற் தொழில்—நிலையத்தில் அல்லது அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் ஆகக் குறைந்த பட்சம் ஐந்து (5 ஆண்டு) ஆண்டுகாலப் பணி பயில்கையாவது வெற்றிகரமாக முற்றுக்கியதுடன் குறைந்த பட்சம் இரண்டு ( 2 ஆண்டுகளாவது) ஆண்டுகளாவது மேற்பார்வை செய்யும் வகையில் சேவையாற்றியுள்ளார் ; எனவும்,

(இ) மேற்பார்வை செய்யும் வகையில் குறைந்த பட்சம் ஓர் ஆண்டு சேவையாவது உட்படக் குறைந்தபட்சம் மூன்று (3 ஆண்டு) ஆண்டு அனுபவமாவது பொதுக்கட்டு வேலை, தொகையானதும் மீளவலுவூட்டப்பட்டதுமான கொங்கிறீற்று வேலை, அமைப்பு உருக்கு வேலை, வெட்டுமரவமைப்புள்ள அகழ்தல் வேலை, சாந்து வேலை, வெடிபொருள் உபயோகமும் குடியியல் பொறியியற் கட்டுவேலைப் பொறித் தொகுதியும், அளவுகள் மதிப்பிடுதல், தொழிலாளரை மேற்பார்வையிடல் ஆகியவற்றில் கொண்டுள்ளார் ; எனவும்,

சான்று அளித்தல் வேண்டும்.

குறிப்பு : தெரிவு செய்யப்படுதலில் கடல் சார்ந்த கட்டிடங்களைப் பேணுதலில் அதாவது, இறங்குதுறைகள் (ஜெற்றிஸ்) துறைமேடைகள் (கீஸ்) போன்றவற்றில் அனுபவம் உடையோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

4. வேண்டிய பிற தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான் :

(அ) 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதியன்று இருபத்தைந்து (25) வயதுக்குக் குறையாமலும் முப்பத்தைந்து (35) வயதுக்குக் மேற்படாமலும் உள்ளார் ; எனவும்,

(ஆ) நற்பண்பு உடையவர் எனவும், காத்திரமான உடற்கட்டு வாய்ந்தவர் ; எனவும்,

உறுதிப்படுத்தும் சான்று அளித்தல் வேண்டும்.

5. ஆட்சேர்த்தல் நியதிகள்.—

(அ) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்துடையதாகும். விதவைகள் அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு உதவு தொகைகள் இறுக்கப்பட வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் குறுகியகால அறிவித்தலின் பேரில் கடமை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுவதுடன் இத்தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றவும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும். இக்கடற்படை தற்போது கொழும்பு, திருகோணமலை, தியத்தலாவை, காரைநகர் ஆகிய இடங்களில் தனது தாபனங்களைக் கொண்டுள்ளது.

6. சேவை நிபந்தனைகள்.—

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், அரச கரும மொழிக் கொள்கையின் பொருட்டான கணிப்பின்படி அரசாங்க சேவையிற் புதிதாகப் புகுந்தவராயின் ;

(அ) அவரது தகுதிகாண் காலவெல்லை மூன்று (3 ஆண்டுகள்) ஆண்டுகளாய் இருக்கும்.

(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் எண் கொண்ட அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டுத் தற்போது நடைமுறையிலுள்ள அல்லது எதிர்காலத்திற் புகுத்தப்படும், சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்குவார் என்ற நிபந்தனைக்கு அவர் உடன்படுதல் வேண்டும் ;

(இ) தகுதிகாண் காலவெல்லைக்குள் அரச கரும மொழியாகிய சிங்களத்தில் தொழிலாற்றும் அறிவை அவர் பெறுதல் வேண்டும்.

(ஈ) தகுதிகாண் காலவெல்லை முடிவுற்றதும் பதவியில் உறுதிப் படுத்தப்படுதல், பிறவற்றுள், நியமனத் திகதியிலிருந்து ஓர் (1 ஆண்டு) ஆண்டு காலத்திலுள்ளும், ஈராண்டு (2 ஆண்டு) காலத்திலுள்ளும் முறையே (சிங்கள மொழித் தேர்ச்சி) முதலாம் தர (I ம் தர) சோதனையிலும், இரண்டாம் தர (II ம் தர) சோதனையிலும் அவர் சித்தியெய்துதலைப் பொறுத்திருக்கும். விதிக்கப்பட்ட காலவெல்லைகளுக்குள் விதிக்கப்பட்ட அந்த அந்தச் சோதனைகளில் அவர் சித்தியெய்தத் தவறுகை அவரது சம்பள ஏற்றம் இடை நிறுத்தப்படும் விளைவை உண்டாக்கும். விதிக்கப் பட்ட காலவெல்லைக்கு அப்பால் மேலும் ஆறு (6 மாத) மாத காலத்தினுள் சோதனையிற் சித்தி அடையப் பெறுவிட்டால் சம்பள ஏற்ற இடைநிறுத்துகை சம்பள ஏற்ற நிறுத்துகையாக மாற்றப்படும். அத்தகைய சம்பள ஏற்ற நிறுத்துகை சோதனையிற் சித்தியெய்தப்படும் வரைக்கும் நடைமுறையில் இருக்கும்.

(உ) தகுதிகாண் காலவெல்லை முடிந்ததும் சிங்கள மொழித் தேர்ச்சியில் விதிக்கப்பட்ட தராதரம் அவரால் அடையப் பெறுவிடின் நிருவாகப் பிரமாணம் 120 இனதும் 121 இனதும் ஏற்பாடுகள் இச்சந்தர்ப்பத்தில் பொருந்துவனவாகும்.

7. இலங்கையில் நிறுவப்பட்ட ஐக்கிய இராச்சியத் தளங்களை அரசாங்கம் பொறுப்பேற்றமை காரணமாக 1956 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆம் திகதியன்று அல்லது அதன்பின் இலங்கையில் இருந்த ஐக்கிய இராச்சியப் போர் புரிசேவையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட குடியியல் ஊழியருக்குப் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன :

(அ) வயது : விதிக்கப்பட்ட உச்ச வயதெல்லைக்குள் அத்தகைய ஊழியர்களைக் கொணர்ந்தற் பொருட்டு அவரவர்களது வயதிலிருந்து ஐ. இ. போர்புரி சேவைகளின்கீழ் கடமையாற்றிய அந்த அந்தக்கால எல்லைகளைக் கழித்தல்.

(ஆ) கல்வித் தகைமைகள் : வேண்டிய கல்வித் தகைமை ஏழாம் தரத்தில் எய்தப்பட்ட சித்தியாகும்.

(இ) பணிபயில்கையும் அனுபவமும் : பணிபயில் காலவெல்லை அவசியமற்றது எனினும் வேண்டப்பட்ட அனுபவ காலவெல்லை பணிபயில் கால எல்லையினால் அதாவது எட்டு ஆண்டுகளாக அதிகரிக்கப்படுகிறது.

8. விண்ணப்பகாரர்கள் தத்தமது விண்ணப்பங்களுடன் பின் வருவனவற்றின் படிகளை இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கங்களின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) அடையப்பட்ட ஆகக்கூடிய கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்.

(இ) முன்னைய அனுபவம்பற்றிய சான்றிதழ்கள் ; அத்துடன்

(ஈ) நற்பண்புபற்றிய இரு அண்மைக்காலத்தியச் சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகர்கள் சான்றிதழ்கள் அளிக்குமாறு வேண்டப்படமாட்டார்).

9. இத்தொடர்பாக, இவ்வரசாங்க வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டனவுமான பொது நிபந்தனைகளைக் காணுமாறு கோரப்படுகிறது.

10. இதன்மேல் வேண்டப்பட்டுள்ளவாறு முன்னைய அனுபவத்தையும் தொழிலையும் பற்றிய முழு விபரங்களைக் காட்டும் விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில், "குடியியல் நிருவாக அலுவலாளரும் கணக்காளரும், இலங்கை அரச கடற்படை, அஞ்சற் பெட்டி 593, கொழும்பு-1" என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கும் கடிதவுறை "(குடியியல் பொறியியல்) துணைமுகாரிக்கான விண்ணப்பங்கள்" என இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்படுவதுடன், 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் குடியியல் நிருவாக அலுவலாளரும் கணக்காளருமாகியவர் வசம் கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

என் தங்கராசா,
குடியியல் நிருவாக அலுவலரும்
கணக்காளரும்,
இலங்கை அரச கடற்படை.

கொழும்பு-1,
1970, செப்ரெம்பர் 2.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### இலங்கை அரச கடற்படை

துணைமுகாரிப் பதவி-குடியியற் பொறியியல் (சிவில் என்ஜினியரிங்)

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.

2. (i) சொந்த வசிப்பிட முகவரி :————.
   (ii) அலுவலக முகவரி :————.

3. பிறப்புத் திகதி (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட வேண்டியது) :————.

4. எந்நாட்டவரென்பது :————.

5. திருமணமானவரா திருமணமாகாதவரா என்பது :————.

6. கல்வித் தகைமைகள் (சித்தியெய்தப்பட்ட பரீட்சைகளினதும் பாடங்களினதும் விபரங்களைத் திகதிகளுடன் தருக) :————.

7. தொழினுட்ப அல்லது பிற தகைமைகள் (சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படல் வேண்டும்) :————.

8. தொழிற்பயிற்சி, பயிற்சி, அனுபவம் இன்னோரன்ன பற்றிய விபரங்களுடன் திகதிகள் :————.

9. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து செய்யப்பட்ட தொழில் விபரங்கள் :————.

10. நற்பண்புச் சான்றிதழ்கள், எந்த ஆட்களிடமிருந்து பெற்று அளிக்கப்பட்டுளவோ அவ்வவர்களது பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

11. ஏதும் பிற விபரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பெற்ற விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் சான்று பகர்கிறேன். இதனுள் அடங்கிய எவ்விபரங்களாயினும் பொய்யானவை அல்லது சரியல்லாதன எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து, அத்தகைய கண்டுபிடிப்பு தெரிவுக்கு முன்னாயின் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னாயின் நட்ட ஈடின்றிப் பதவி நீக்கத்திற்கும், நான் ஆளாகுவேன் என்பதையும் நானறிவேன்.

திகதி :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

9-427—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## இலங்கை தரைப்படை—பிற வரிசையினர் நியமனம்

இலங்கை தரைப்படையின் நிரந்தரப்படையில் நேரடியான போர்வீரர்களாகச் சேருவதற்குக் காலி ஸ்தானங்கள் இருக்கின்றன. இக் காலி ஸ்தானங்களுக்கு எதிரே கேட்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| நியமனம் | கூறு | வேண்டிய விசேச தகைமைகள் |
|---|---|---|
| (அ) படையினர்—(நுண்தொழில் எழுதுவினைஞர்கள்) | இ. இ. போ. ப. .. | விண்ணப்பகாரர்கள் குறைந்த பட்சம் ஆங்கிலத்தில் நிமிடத்துக்கு 35 சொற்களும் சிங்களத்தில் 20 சொற்களும் தட்டெழுத்து தட்டக் கூடியவராயிருத்தல் வேண்டும். ஆங்கிலம்/சிங்களம் ஆகியவற்றில் சுருக்கெழுத்து எழுதுதல் அனுபவம் உடையோருக்கும், காரியாலய அனுபவம், பதிவு செய்தல் அனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் கல்விப் பொது தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்)ல் சிங்களம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்குக் கூடாத முறைகளில் சித்தியடைந்தவர்களாயிருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஆ) படையினர்—(நுண்தொழில் களஞ்சியப் பொறுப்பாளர்) | இ. இ. போ. ப. .. | விண்ணப்பகாரர்கள் வாகன மாற்றுறுப்புகளை அறிந்து கூறக்கூடிய அனுபவம் உடையோராயும் மற்றும் பொது களஞ்சியப் பொருட்களை அறிந்து கூறக்கூடிய அனுபவம் உடையோராயும் இருத்தல்வேண்டும். நுண்தொழில் போக்குவரத்து மாற்றுறுப்புகள் சம்பந்தமானவைகள் பற்றிய அறிவுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் சிங்களம்/தமிழ் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (இ) படையினர்—(பூட் சப்பாத்து பழுதுபார்ப்போர்கள்) .. | இ.இ.போ.ப. .. | விண்ணப்பகாரர்கள் தோல் பொருட்கள் தெரிந்தெடுக்கும் அறிவுடையோராயும் எல்லாவித பூட்ஸ் சப்பாத்துகள், முன்குதி ஆணிகளைக் களற்றியும், பின்குதிகளை களற்றியும், தோல் பொருத்தியும், சமப்படுத்தியும், காப்சோல் செய்வதற்கு தோல் ஆயத்தப்படுத்தியும், முன்குதி, பின்குதி ஆகியவற்றிற்கு ஆணி பொருத்தியும், மெழுகு பூசி சப்பாத்தின் மேல் பகுதியை தைத்தும், பழுது பார்க்கக் கூடிய அறிவு உடையோராய் இருத்தல் வேண்டும். பூட் சப்பாத்து தைக்கும் இயந்திரங்களை இயற்றக்கூடிய வல்லமை ஒரு கூடிய தகைமையாகும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் 7 வது தரம் சித்தியடைந் திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (ஈ) படையினர்—(தச்சு வேலையாளர்கள்) .. | இ.இ.போ.ப. .. | விண்ணப்பகாரர்கள் தச்சு வேலை அடிப்படையான நல்ல அறிவுடையோராய் இருத்தல் வேண்டும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் சிங்களம்/தமிழ் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (உ) படையினர்—(தையாற்காரர்கள்) .. | இ.இ.போ.ப. .. | விண்ணப்பகாரர்கள் அளவை எடுத்தல், உடுப்புகளை மாற்றச் செய்தல் திருத்தியமைத்தல் ஆகியவற்றில் அறிவுடையோராயிருத்தல் வேண்டும். தையற்கருவி உபயோகித்தலில் பயிற்சி உடையோராயிருத்தல் வேண்டும். போர் வீரர்களின் உடுப்புகளை வெட்டித் தைத்தலிற் தகைமையுடையோராயிருத்தல்வேண்டும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் சிங்களம்/தமிழ் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வி தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஊ) படையினர்—(பொருள் பழுதுபார்ப்போர்) | இ.இ.போ.ப. .. | விண்ணப்பகாரர்கள் தோல் பொருட்கள் அறிந்து கூறக்கூடிய அறிவுடையோராயும் எல்லாவிதமான மெழுகுபூசி தோல் பொருட்களையும், தோல் பொருட்களை தைத்தும், பொருத்தியும் பழுது பார்க்கக்கூடிய அறிவுடையோராயும் தனித் தையல், இரட்டைத்தையல்கொண்டு வாகனங்களில் கூடாரங்களைத் தைத்து சிறு பழுது பார்த்தல்களை செய்யக்கூடியவராயும் இருத்தல்வேண்டும்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித்தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (எ) கோப்ரல்—(குளிர்ப்பெட்டிப் பொறியியலாளர்கள்) | இ.மி.நு.போ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் 5 வருடங்கள் குளிர்பெட்டிப் பொறித்தொகுதியும், பொருட்கள் சம்பந்தமான பழுது பார்தலில் அனுபவம் உடையவராயிருத்தல்வேண்டும்.<br>விண்ணப்பகாரர்கள் கனிஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப்பரீட்சை (ஜே. எஸ். சி.) அல்லது 8 வது தரம் சிங்களம்/தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஏ) கோப்ரல்—கடற்பொருள் (படகு இயந்திரம்) பொருத்தலாளர்கள் | இ.மி.நு.போ. .. | விண்ணப்பகாரர்கள் வெளிநிருவக இயந்திரங்கள் பழுதுபார்த்தலில் பிரசித்தி பெற்ற ஸ்தாபனம் ஒன்றில் ஐந்து வருட அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும். வேண்டப்படும் தகைமைகளை அற்ற விண்ணப்பகாரர்கள் குறிக்கப்பட்ட பதவி நிலையின் கீழ் நிலையில் சேர்த்துச் கொள்ளப்படலாம்.<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை (ஜே.எஸ்.ஸி.) அல்லது 8 வது தரம் சிங்களம் அல்லது தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

| | நியமனம் | கூறு | வேண்டிய விசேச தகைமைகள் |
|---|---|---|---|
| (ஐ) | படையினர்—(காய்ச்சி ஓட்டுவோர்) பிரிவு "B" வகுப்பு 3 | 1 வது பேரணி இ.பொ. | விண்ணப்பக்காரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தல் வேண்டும்<br>தொழிற் பகுதியால் அல்லது நுண்தொழில் கல்லூரியினால் நடாத்தப்பட்ட தொழில் முறைப் பயிற்சியை சித்திகரமாய்ப் பூர்த்தி செய்தவர் எனக்காட்டும் சான்று உடையவராய் ; அல்லது<br>பிரசித்தி பெற்ற பொறியியல் ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருட காலம் நிரந்தரமாய் ஊழியம் செய்தவர் எனக்காட்டும் சான்றிதழ் உடையவராய்<br>விண்ணப்பக்காரர்கள் குறைந்தபட்சம் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித்தகைமைகளை உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (ஒ) | படையினர்—(டிரம்பட்/பியுகல் ஊதுபவர்கள்) | இ.ஆ.ப., இ.பீ.ப. .. | விண்ணப்பக்காரர்கள் நல்ல நிலைமையினால் ஆன முற் பற்களை உடையவராயிருத்தல் வேண்டும். சங்கீதத்திற்கு இயல்பான அறிவுடையோராயும் பியுகல் வாசிக்கக் கூடியவராயும் டிரம்பட் அல்லது வேல்வ் டிரம்பட் வாசிக்கக் கூடியவர்களாயும் இருத்தல் வேண்டும்<br>விண்ணப்பக்காரர்கள் குறைந்தபட்சம் 5 வது தரம் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (ஓ) | படையினர்—(சமையலாளர்கள்) .. | இ.இ.சே.ப. .. | விண்ணப்பக்காரர்கள் சமைத்தல் சம்பந்தமாய் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும். அத்துடன் கீழைத்தேச, மேலைத்தேச சமையல்கள் தயாரிப்பதில் இயல்புடையவராயிருத்தல் வேண்டும்<br>விண்ணப்பக்காரர்கள் குறைந்தபட்சம் 5 வது தரம் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (ஔ) | படையினர்—(எழுதுவினைஞர்கள் பொது வேலைகள்) | இ.இ.பொ.சே.ப. .. | விண்ணப்பக்காரர்கள் எழுதுவினைஞர் தொழில் சம்பந்தமாகக் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்களாயும் நிமிடத்துக்கு 20 சொற்கள் தட்டெழுத்துத் சிங்களம் தட்டக்கூடியவர்களாயும் கணக்குப் பதிவியல் அறிவுள்ளவராயும் இருத்தல் வேண்டும்<br>விண்ணப்பக்காரர்கள் குறைந்தபட்சம் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சை (சாதாரணம்) சிங்களம் உட்பட இரு தடவைகளுக்குள் ஆறு பாடங்கள் சித்தியடைந்தவர்களாயும் இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (க) | படையினர்—(தொழில் முகாமி) கட்டட வேலை, பிரிவு "A", வகுப்பு III .. | இலங்கை பொறியியலாளர் தொழிற் சேவை | விண்ணப்பக்காரர்கள் இலங்கை நுண்தொழில் கல்லூரியில் அல்லது காரடி நுண்தொழில் பயிற்சிக் கல்லூரியில், கட்டுபத்த தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி, இலங்கை தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் ஏதாவது ஒரு பகுதியில் சிவில் பொறியியலாளர் பயிற்சிநெறியில் முதல் வருட பரீட்சையைப் பூர்த்தி செய்தவராயும் கட்டட வேலையை ஒரு பாடமாகப் பூர்த்தி செய்தவர்களாயிருத்தல் வேண்டும். கூடிய தகைமைகளை உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (கா) | படையினர்—(தொழில் முகாமி மின்சாரமும் இயந்திரமும்), பிரிவு "A", வகுப்பு III | ஷை .. | விண்ணப்பகாரர்கள் இலங்கை நுண்தொழில் கல்லூரியில், கார்டி நுண் தொழில் பயிற்சிக் கல்லூரி, கட்டுபத்த தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி, இலங்கை தொழில்நுட்பப் பயிற்சிக்கல்லூரியில், கீழ்குறிப்பிட்டவைகளில் ஒன்று அல்லது பல பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் :— மின்சாரமும் காந்தசக்தியும், மின்சாரத்தின் மூலப்பொருள், மின்சார தொழில்நுட்பவியல் 1. கூடிய தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (கி) | படையினர்—(நுண்தொழில் எழுதுவினைஞர்கள்), பிரிவு "B", வகுப்பு III | ஷை .. | விண்ணப்பகாரர்கள் எழுதுவினைஞர் தொழில் சம்பந்தமாய் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்<br>விண்ணப்பகாரர்கள் கல்விப்பொதுத் தராதரப்பத்திர பரீட்சை (சாதாரணம்) இரண்டு தடவைகளுக்குள் ஆறு பாடங்களில் அல்லது சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சிங்களம் உட்பட தட்டெழுத்து பாடத்தில் திறமையான சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (கீ) | படையினர்—(நுண்தொழில் களஞ்சியப் பொறுப்பாளர்கள்), பிரிவு "B", வகுப்பு III | ஷை .. | விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சை (சாதாரணம்) இரண்டு தடவைகளுக்குள் ஆறு பாடங்களில் அல்லது சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில், கணக்குப் பதிவியல் பாடத்தில் திறமையான சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| (கு) | படையினர்—(வரைஞர்கள், பிரிவு "A", வகுப்பு III | ஷை .. | விண்ணப்பக்காரர்கள் இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில், கார்டி நுண்தொழில் பயிற்சிக் கல்லூரியில, கட்டுபத்த தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியில் அல்லது இலங்கை தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் வரைதல் பாடத்தில் ஒரு வருட (முழு நேர) பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவராயிருத்தல் வேண்டும்<br>விண்ணப்பக்காரர்கள் குறைந்தபட்சம் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்) இரு தடவைகளுக்குள் தூய கணிதம் உட்பட ஆறு பாடங்களில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாய் இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் |

| கலேஞர் பகுதிகள் | | |
|---|---|---|
| (கூ) படையினர்—(கட்டட வேலையாளர்), பிரிவு " B ", வகுப்பு III<br>(கெ) படையினர்—(தச்சு வேலையாளர்) பிரிவு " B ", வகுப்பு III<br>(கே) படையினர்—(மின்சார வேலையாளர்), பிரிவு " A ", வகுப்பு III | இலங்கை பொறியியலாளர் தொழிற் சேவை | .. விண்ணப்பக்காரர்கள் தொழில் பகுதி இலாகாவால் அல்லது இலங்கை நுண்தொழில் கல்லூரியால் நடாத்தப்பட்ட தொழில் முறைப் பயிற்சியை பூர்த்தி செய்தவர் எனக் காட்டும் சான்றுப்பத்திரம் உடையவராய் அல்லது கீழ்க்குறிப்பிட்டவற்றில் ஏதாவது தகைமையுடையவர் என்று காட்டும் சான்றுப்பத்திரம் உடையவராய் இருத்தல் வேண்டும். பிரசித்தி பெற்ற ஒரு பொறியியல் ஸ்தாபனம் ஒன்றில் ஒரு கலேஞனுக்குக் கீழ் குறைந்த பட்சம் 3 வருட காலம் ஒழுங்காக ஊழியம் செய்தவர் எனக் காட்டும் சான்றுப்பத்திரம்<br>விண்ணப்பகாரர்கள் குறைந்தபட்சம் 7 வது தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூடிய தகைமைகளையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப் படும் |

குறிப்பு.—விண்ணப்பக்காரர்கள் தாம் எந்த நியமனத்திற்குத் தம் விண்ணப்பங்களை தயார் செய்வது என்று தெளிவாக எழுதுதல் வேண்டும். அத்துடன் ஒரு தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றவும் தயாராயிருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பகாரர்களின் தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு தேர்தலுக்கு முன் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

3. இவ் விளம்பரத்தின் 1 ம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. தரைப்படையில் நேரடியான போர் வீரர்களாகச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு 1 ம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் மேலதிகமாகப் பின்வரும் பொது நிபந்தனைகளையும் விண்ணப்பகாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

ஒரு விண்ணப்பக்காரர்—

(அ) இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1971 சனவரி மாதம் 1 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அரச கரும மொழியில் தேர்ச்சியுண்டு என்பதை தெளிவாக அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) தரைப்படைத் தளபதியின் திருப்திக்கேற்ப வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதவராயும் இருத்தல் வேண்டும்.

எனினும் படைத் தளபதியின் தீர்மானத்திற்கேற்ப தகுதியுடையவர்கள் எனக் காணப்படும் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்த உயரம் உடையோரை சேர்த்துக் கொள்ளலாம்.

5. இக் காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யக்கோரும் இராணுவத்தில் இருந்து திரும்பியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மேற் குறிப்பிட்ட பொது நிபந்தனைகட்கு மேலதிகமாகப் பின்வரும் நிபந்தனைகளையும் நிரூபித்தல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பாதுகாப்பு படையுடன் கூடிய பிரித்தானிய சாம்ராச்சிய இராணுவத்தின் படைகளில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத சேவையுடையவராயும் ;

(ஆ) சேவையில் இருந்து விலகிய போது அவரின் சேவைத் தரம் குறைந்தபட்சம் " மிக நன்று " என்றுதல் தரம் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. **சேவைக்காலம்.**—ஒரு போர் வீரர் சாதாரணமாக 12 வருட காலத்திற்குச் சேவைக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதில் 5 வருட காலம் கட்டாய சேவையாகவும் 7 வருடகாலம் மேற்படி படையின் ஒதுக்கச் சேவையிலும், சேர்த்துக்கொள்ளப்படும். இச்சேவைக்கால வரையறை முடிவில் சேவையில் இருந்து விலக்கப்படலாம். எனினும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் ஒரு போர்வீரர் தனது சேவைக்காலத்தை மேலும் 12 வருடங்களுக்கு நீட்டிக்கொள்ளலாம். இச்சேவைக்காலம் எல்லாமாக 32 வருடம் வரை சேவை செய்யக்கூடியதாகச் சேவைக்கு அனுமதிக்கப்படலாம்.

7. **சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படிகளும்.**—தரைப்படையின் நிரந்தரப்படையின் பிற வரிசையினருக்கான சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படியும் பின்வருமாறுனதாகும் :—

(அ) பிரிவு III.—தொழில் நுணுக்கமற்ற 1, 2, 3 ம் தரத்தினரும், பிரிவு " B " வகுப்பு 1, 2, 3 தரத்தினரும் உட்பட்ட தொழில் நுணுக்கம் உடையோரும்.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான .. .. .. | ரூபா 2,880—15 × 60—ரூபா 3,780 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான .. .. .. | ரூபா 3,060—15 × 60—ரூபா 3,960 |
| கோப்ரல் அல்லது சமமான .. .. .. | ரூபா 3,660—15 × 72—ரூபா 4,740 |
| சார்ஜன்ட் .. .. .. .. | ரூபா 4,620—10 × 90—ரூபா 5,520 |
| ஸ்டாப் சார்ஜன்ட் .. .. .. .. | ரூபா 5,010—10 × 90—ரூபா 5,910 |
| வரண்ட் உத்தியோகத்தர் II .. .. .. | ரூபா 5,220—10 × 120—ரூபா 6,420 |
| றெஜிமென்டல் குவாடர் மாஸ்டர் சார்ஜன்ட் .. .. | ரூபா 5,340—10 × 120—ரூபா 6,540 |
| வரண்ட் உத்தியோகத்தர் I .. .. .. | ரூபா 5,640—10 × 144—ரூபா 7,080 |

குறிப்பு :—(1) ஒரு படையினரின் மாதச் சம்பளம் வகுப்பு 2 அல்லது தரம் 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 280 க்கு மேற்படும். வகுப்பு 1 அல்லது தரம் 3 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் 295 க்கு மேற்படும்.

(2) ஒரு லான்ஸ் கோப்ரலின் மாதச் சம்பளம் வகுப்பு 2 அல்லது தரம் 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 295 க்கு மேற்படும். வகுப்பு 1 அல்லது தரம் 3 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 315 க்கு மேற்படும்.

(3) ஒரு கோப்ரலின் மாதச் சம்பளம் வகுப்பு 1 அல்லது தரம் 3 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 365 க்கு மேற்படும். (வகுப்பு 1 அல்லது தரம் 3 க்கு தகைமையுடையவரல்லாத எந்த ஒரு பிற வரிசையினரும் கோப்ரல் நிலேக்கு பதவி உயர்ச்சி செய்யப்படமாட்டார்கள்).

(ஆ) பிரிவு II—தொழில்நுணுக்கமுடைய பிரிவு " A " 1, 2, 3 ம் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் உட்பட.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 2,940—15 × 60—ரூபா 3,840 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான | ரூபா 3,120—15 × 60—ரூபா 4,020 |
| கோப்ரல் அல்லது சமமான | ரூபா 3,720—15 × 72—ரூபா 4,800 |
| சார்ஜண்ட் | ரூபா 4,800—10 × 90—ரூபா 5,700 |
| ஸ்டாப் சார்ஜண்ட் | ரூபா 5,250—10 × 90—ரூபா 6,150 |
| வரண்ட் உத்தியோகத்தர் II | ரூபா 5,520—10 × 120—ரூபா 6,720 |
| ரெ. கு. மா. சா. | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| வரண்ட் உத்தியோகத்தர் I | ரூபா 5,940—10 × 144—ரூபா 7,380 |

குறிப்பு :—(1) ஒரு படையினரின் மாதச் சம்பளம் வகுப்பு 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 285 க்கு மேற்படும். வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 300 க்கு மேற்படும்.

(2) ஒரு லான்ஸ் கோப்ரலின் மாதச் சம்பளம் வகுப்பு 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் 300 க்கு மேற்படும். வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 320 க்கு மேற்படும்.

(3) ஒரு கோப்ரலின மாதச் சம்பளம் வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 370 க்கு மேற்படும்

(இ) பிரிவு I—தொழில் நுணுக்கமுடைய பிரிவு " X " 1, 2, 3 ம் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் உட்பட.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 3,000—15 × 60—ரூபா 3,900 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான | ரூபா 3,240—15 × 60 —ரூபா4,140 |
| கோப்ரல் அல்லது சமமான | ரூபா 3,840—15 × 72—ரூபா 4,920 |
| சார்ஜண்ட் | ரூபா 4,920—10 × 90—ரூபா 5,820 |
| ஸ்டாப் சார்ஜண்ட் | ரூபா 5,340—10 × 90—ரூபா 6,240 |
| வரண்ட் உத்தியோகத்தர் II | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| ரெ. கு. மா. சா. | ரூபா 5,880—10 × 120—ரூபா 7,080 |
| வரண்ட் உத்தியோகத்தர் I | ரூபா 6,120—10 × 144—ரூபா 7,560 |

குறிப்பு I—(1) ஒரு படையினரின் மாதச் சம்பளம் வகுப்பு 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 290 க்கு மேற்படும். வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 305 க்கு மேற்படும்.

(2) ஒரு லான்ஸ் கோப்ரலின் மாதச் சம்பளம் வகுப்பு 2 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின சம்பளம் ரூபா 305 க்கு மேற்படும். வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 325 க்கு மேற்படும்.

(3) ஒரு கோப்ரலின் மாதச் சம்பளம் வகுப்பு 1 க்குத் தகைமையுடையவரானுல் மட்டுமே அவரின் சம்பளம் ரூபா 380 க்கு மேற்படும்.

(ஈ) **விவாகமான பிற வரிசையினருக்கான வாழ்க்கைச் செலவுப்படி**

விவாகமான பிற வரிசையினருக்கு பொது வழியருக்குப் போன்ற முறையிலான விகிதமான வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்

(உ) **சலவைச் செலவுப்படி**

(1) பாசறையில் வசிக்கும் போர் வீரர்கள் தம் இராணுவ உடைகளை தரைப்படையின் செலவில் இலவசமாகச் சலவை செய்து கொள்ள அருகதையுடையவர்களாவார்கள்.

(2) பாசறைக்கு வெளியே வசிக்கும் போர்வீரர்கள் தரைப்படைத் தளபதியின நிர்ணயத்திற்கேற்ப தனது இராணுவ உடைகளைச் சலவை செய்வதற்காக ஒரு சலவைச் செலவுப்படியைப் பெற அருகதையுடையராவார்கள்.

(ஊ) கீழ்க்காணும் வகையிலான நந் நடத்தைப்படியொன்றுக்குப் பிறிவரிசையினர் அருகதையுடையவராவார்கள் :—

1 ம் பதக்கம்— 4 வருடகால சேவை முடிவுக்குப்பின்—நாளொன்றுக்கு 25 சதம்
2 ம் பதக்கம்— 8 வருடகால சேவை முடிவுகளுக்குப்பின்—நாளொன்றுக்கு 50 சதம்
3 ம் பதக்கம்—12 வருடகால சேவை முடிவுக்குப்பின்—நாளொன்றுக்கு 75 சதம்

(எ) கீழ்க்காணும் இடங்களில் சேவைக்கு அமர்த்தப்படும் பிற வரிசையினருக்கு கஷ்டப்பணிப்படியொன்றும் வழங்கப்படும்.

(1) மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள கள்ளக்கடத்தல் குடியேற்றத் தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.
(2) வளவை, பதவிய, முதியன்கட்டி குளம் ஆகிய இடங்களில் உள்ள விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.
(3) தரைப்படைத் தளபதியினுல் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.

(ஏ) **கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதி**
போர்வீரர்களாச் சேர்த்துக் கொள்ளப்படும் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தின் 4 விகிதமானதைக் கழித்துத் தனது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதிக்குச் சேர்ப்பதற்கு எழுத்துமூலம் தன் சம்மதத்தை கொடுத்தல் வேண்டும்.

8. இவ்வறிவித்தலின் 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நேரடியான போர்வீரர் காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பிக்கும், விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தனவாக இருத்தல் வேண்டும் :—

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போன்றதாகவும், விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பகாரர்களின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் யாவும், தரைப்படை ஆள்திரட்டும் அதிகாரி, தரைப்படைத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம்553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்திலும் அவற்றை அனுப்பும் உறையிலும் " நிரந்தரப் படையில் சேருவதற்கான விண்ணப்பம் "—"பிறவரிசையினர் " என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1970 செப்தம்பர் மாதம் 30 ம் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன் தரைப்படைத் தலைமை நிலையத்தில் சேரவேண்டும்.

(இ) விண்ணப்பகாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவி, தரம் (நியமனம், கூறு) ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) பின்வரும் சான்றுப்பிரதிகளின், பிரதிகள் மட்டும் விண்ணப்பங்களுடன் இணைத்திருத்தல் வேண்டும் :

(1) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பகாரர்களைப் பொறுத்தவரையில்) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப்பத்திரம், ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றுப் பத்திரம் அல்லது ஜாதகம் இதுபோன்ற வேறும் பிறப்புக் குறிப்புகள் எதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) பெற்றுக்கொண்ட ஆகக்கூடிய கல்வித் தகைமையைக் காட்டும் கல்வித் தராதரப்பத்திரம்.

(3) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் விண்ணப்பகாரரின் கல்வித் தராதரம், நடத்தை, விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பன பற்றிக்குறிப்பிடும் மூன்று நற்சான்றுப்பத்திரங்கள், ஒரு விண்ணப்பகாரர் ஏற்கனவே தொழில் செய்பவரானுல் இதில் ஒன்று அவரது தற்போதைய மேலதிகாரியால் கொடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு : (1) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மாத்திரமே இச்சான்றுப் பத்திரங்களின் உண்மைப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பியதன் மூலம் தவறி அல்லது காணுமல் போகும் எவ்விதமான தஸ்தாவேஜுகளின் உண்மைப் பிரதிகள் சம்பந்தமாகத் தரைப்படை தலைமை நிலையம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

(ஊ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எவ்விதமான முறையீடுகளும் கவனிக்கப்படமாட்டாது.

(ஊ) இலங்கை தொண்டர் படையின் அங்கத்தவர்கள் தம் விண்ணப்பங்களைத் தமது சேனைத் தலைமை நிலையத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) அரசாங்கத் திணைக்களத்திற்கூடாக அனுப்பப்பட்ட, ஆனால் உரிய காலத்திற்குப் பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தாமதத்திற்குப் போதிய காரணத்தைக் காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் கிடைத்ததென்றும் அது ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டிராதவிடத்து, இத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஐ) தரைப்படைத் தெரிவுக்குழுவால் தகுதியுள்ளவர் எனக் கருதப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்வாறு வேண்டப்படும் விண்ணப்பகாரருக்கு அவ்வாறுனவை பற்றி நேரம், காலம் என்பன பற்றி இவர்கட்குத் தனித்தனி அறிவிக்கப்படும்.

(ஒ) நேர்முகப் பரீட்சைக்குப் பின் சேர்த்துக்கொள்ளுவதற்குத் தகைமையுடையவர் எனத் தெரிவுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தமது சொந்தச் செலவில் ஒன்று அல்லது பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு கொழும்பில் சமுகமளிக்க வேண்டும்.

(ஓ) தேவையான பரிசோதனைகளையும், நேர்முகப் பரீட்சைகளையும் தேர்ச்சியாய் முடித்த விண்ணப்பகாரர்கள் தரைப்படையின், நிரந்தரப் படையில் சேர்க்கப்பட்டு, தரைப்படை பயிற்சி நிலையத்தில் அல்லது வேறேதேனும் இடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

(ஔ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்துமூலம் சமர்ப்பித்தல் அன்றி எந்த ஒரு 21 வயதுக்குக் குறைந்தவரும் தரைப்படையின் நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

(க) தெரிவு செய்யப்பட்டு தரைப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும் விண்ணப்பகாரர்கள் அனைவரும் 1956 ஆம் வருட 33 ம் இலக்க அரசகரும மொழிச் செயல் முறைக் கட்டளைச் சட்டத்திற்கும், சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் உள்ள எல்லாக் கட்டளைச் சட்டங்கட்கும் இது சம்பந்தமாக இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்களுக்கும் அடங்கி நடக்க வேண்டும் என்றும் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

(கா) எவரேனும் ஒருவர் ஒரு விண்ணப்பகாரரைச் சிபாரிசு செய்ய விரும்பினுல் அவருக்கு ஒரு நற்சான்றுப் பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசு செய்யலாம், அன்றி விண்ணப்பகாரர் தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரையும் அவரின் விண்ணப்பத்தை நிராகரித்தற்கும் ஏற்ற ஏதுக்களாகும்.

(கி) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பகாரர் தெரிவு பெறுவதற்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும், தரைப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டுபிடிக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தரைப்படையில் இருந்தும் விலக்கப் படுவர்.

தரைப்படைத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
3.9.70.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதி.

### இலங்கை தரைப்படையின் நிரந்தரப்படையில் பிற வரிசையினராகச் சேருவதற்கான மாதிரி விண்ணப்பப்பத்திரம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ————. வயது : ————.
4. சித்தியடைந்துள்ள பரீட்சைகள், பாடங்களும் திகதியும் உட்பட : ————.
5. எந்த நியமனத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளீர் ? : ————.
   (1 ம் பந்தியின் பிரகாரம், நியமனம், கூறு என்பன குறிப்பிடல் வேண்டும்)
6. இந்நியமனம் சம்பந்தமாக 1 ம் பந்தியின் பிரகாரம் உமக்குள்ள விசேட தகைமைகளையும் அனுபவங்களையும் குறிப்பிடுக : ————.
7. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகிய பின் செய்த தொழில் : ————.
8. உயரம் : ————. அடி ————. அங்குலம்.
9. தேசிய இனம் : ————.
10. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.
11. இதற்கு முன் செய்த சமமான தொழில், பிரிவு, தகுதிகள் என்பன : ————.
12. தரைப்படை (யுத்தகால சேவையுட்பட) கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருப்பின், அவற்றின் பிரிவு, தகுதிகள் ஆகியவற்றின் முழு விபரங்கள் : ————.
13. இராணுவத்தில் இருந்து திரும்பிய/விலகியபோது உமது நடத்தை : ————.
    (திரும்பி/விலகியபோது வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்)
14. வேறு ஏதும் தகுதிகள் இருப்பின் (விளையாட்டுகள் சம்பந்தப்பட்டவை) : ————.
15. 8 ம் பந்தி (ச) (3) ம் பிரிவின்படி நற்சான்றுப்பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் :
    (1) ————.
    (2) ————.
    (3) ————.
16. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி : :—

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னுல் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் ஏற்றுக்கொள்ளும்படியும் இத்தால் உறுதிகூறுகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

9–425—11.9.70 ந் திகதி வர்த்தமானி இல. 14,923

## கல்வி அமைச்சு

### கண்டிய நடனப் பரிசோதகர் பதவிகள்

கல்வி அமைச்சிலுள்ள கண்டிய நடனப் பரிசோதகர் பதவிகளுக்கு கீழ் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம் :**

இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 4,296—144 × 16—6,600/– வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூபா 5,304 பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவுமாகும். நியமனம், முதற்கண், மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையராவர் ; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(iii) நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, முதற்கண், அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

4. **சேவை நிபந்தனைகள் :**

அரசினர் சேவையில் புதிய முறைப்படி நியமனம் பெறும் ஒருவரைப் பொறுத்தவரையில், அரசகரும மொழி நோக்கங்களின் பொருட்டு—

(i) அவருடைய தகுதிகாண்/பரிட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருதற்கு, குறிப்பாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கமைய ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரிட்சார்த்த காலத்துக்குள் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) நியமதாரி, தகுதிகாண்/பரிட்சார்த்த கால முடிவில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய நிபந்தனைகளுடன், நியமனத் திகதியிலிருந்து முறையே ஒரு வருட, இரண்டு வருட, மூன்று வருட காலத்துக்குள் I ந் தர, II ந் தர, III ந் தர சிங்களத் தேர்ச்சிப் பரிட்சையில் (I ந் தர, II ந் தர, பரிட்சையில் ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில், காரியத்துக்கேற்ப) சித்தியடைதலைப் பொறுத்ததாகும். விதிக்கப்பட்ட காலத்துக்குள் இப்பரிட்சைகளில் சித்தியடையத் தவறின் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து 6 மாத காலத்துக்குள் இப்பரிட்சையில் சித்தியடையத் தவறின இடைநிறுத்தம் செய்யப்பட்ட உயர்ச்சிப்பணம் நிறுத்தப்படும். இங்ஙனம் நிறுத்தப்பட்ட உயர்ச்சிப் பணம் குறித்த பரிட்சையில் அவர் சித்தியடையும்வரை அல்லது கீழே (V) ம் பந்தியில் கொடுத்துள்ள ஏற்பாடுகள் அமையும் காலம்வரை நிறுத்தி வைக்கப்படும்.

(v) சிங்களத்தில் தேவைப்படும் தேர்ச்சி தகுதிகாண்/பரிட்சார்த்த கால முடிவில் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் நிர்வாக விதிகள் இல. 120, 121 ஆகியவற்றின் கீழுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

(vi) தெரிவு செய்யப்படுபவர் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள், நிதி விதிகள், இவ்வமைச்சால் விடுக்கப்படும் கட்டளைகள், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு யாதேனும் கட்டளைகள் ஆகியவற்றிற்கு அமைய வேண்டும்.

(vii) வருடாந்தச் சம்பளம் ரூபா 5,304 இல் விதிக்கப்பட்டுள்ள வினைத்திறமைகாண் தடைக்கு மேலே செல்வதற்கு அவர் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரிட்சையில் அல்லது உயர்ந்த பரிட்சையில் சிங்கள மொழியில் அல்லது சிங்கள இலக்கியத்தில் சித்தி அடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து அவரது சம்பள உயர்ச்சிப் பணம் மிற்போடப்படும்.

(சிங்கள மொழி மூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேற்போந்த (iii), (iv), (v) ம் உப பந்திகளில் கொடுபட்டுள்ள நிபந்தனைகள் அமையா).

5. **தேவைப்படும் தகைமைகள் :**

(அ) 30.9.1970 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரிட்சையில் அல்லது இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்கள மொழி, எண் கணிதம்/கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரணதர) ப. பரிட்சையில் ; அல்லது சமனான அல்லது உயர்ந்த பரிட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) அரசினர் நடன, நாட்டிய நடனக் கல்லூரியில் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் அல்லது அரசினர் சங்கீத/நடனக் கல்லூரியால் வழங்கப்படும் இறுதித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) 5 (இ) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றபின் நடனம் கற்பிப்பதில் (ஆசிரியராக) குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

குறிப்பு—சங்கீதத்திலும் இந்திய நடனத்திலும் தராதரப் பத்திரங்கள் பெற்றிருக்கும் அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. விண்ணப்பதாரிகள், தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (குறிப்பு—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் அல்லது இவைகளில் எவையேனும்.

(இ) விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கான தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால குணச்சான்றிதழ்கள்.

குறிப்பு—ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் இவ்வுப பிரிவில் கேட்கப்பட்டுள்ள குணச்சான்றிதழ்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பப் படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும்.

9. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களை தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளும்படி அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி " நிரந்தரக் காரியதரிசி, பொது நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும். இவ் வேறுபாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சேர்க்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

இல. : பொ. நி. 22/128.
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970.9.3.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கண்டிய நடனப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. 30.9.1970 அன்று உள்ளபடி சரியான வயது : வரு : மா : நா :
4. சாதியும் அது எங்ஙனம் பெறப்பட்டதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.
6. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலா அல்லது சமனான வேறு பரீட்சையிலா அல்லது வேறு உயர்ந்த பரீட்சையிலா நீர் சித்தியடைந்தீர் ? (தராதரப் பத்திரத்தின் பெயரையும் அது எம்மொழிமூலம் எனவும் குறிப்பிடவும்—தராதரப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
7. கண்டிய நடனத்தில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
8. சிங்கள மொழியில் பெற்றுள்ள அறிவு : ————.
9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.
10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின், பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள விகிதம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக் குறிப்பிடுக) ————.
11. கண்டிய நடனம் கற்பிப்பதில பெற்றுள்ள அனுபவம் (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) : ————.

| பாடசாலைப் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக்காலம் வரு. மா. நா. | விலகிய காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

மொத்தம் :

12. யுத்த சேவை யாதேனும் இருப்பின், விபரங்கள் (விலக்கற் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) : ————.
13. குணச்சான்றிதழ்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் (இவர்கள் உறவினர்களாயிருக்கலாகாது) பதவிப் பெயர்களும். குணச்சான்றிதழ்களின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்பட வேண்டும். (அரசினர் சேவையிலுள்ளவர்கள் இவற்றையனுப்ப வேண்டியதில்லை) : ————.
14. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–435/1—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## கல்வி அமைச்சு

### மனையியல் வட்டார வித்தியாதிகாரி (சிங்கள/தமிழ்) பதவிகள்

கல்வி அமைச்சிலுள்ள வட்டார வித்தியாதிகாரி (மனையியல்) பதவிகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமைய தயாரிக்கப்பட்டு நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. நியமன நியதிகள்.—

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். எனினும், நியமனம், முதற்கண் சேமலாப நிதி அடிப்படையில் அமையும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு சம்பளத்தில் 5% கட்டணம் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யுமுன் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளப் பிரமாணத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய ஆசிரியராக அல்லது சேமலாப நலனுடைய ஒரு பதவியில் அல்லது இவ்விரு பதவிகளிலும் ஏற்கனவே 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின் நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் அவர் தமது விருப்பத்தை அறிவிக்க வேண்டும்.

(ii) நியமனம், முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும். ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

**3. சேவை நிபந்தனைகள் :**

(1) புதிய முறைப்படி அரசினர் சேவைக்கு நியமிக்கப்படுபவரைப் பொறுத்தவரையில் அரச கரும மொழிக் கொள்கை நோக்கங்களின் பொருட்டு :—

(i) தகுதிகாண்/பரிட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை செயற்படுத்தும் பொருட்டு குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளவையும் இனிமேல் செய்யப்படக் கூடியவையுமான விதிகளுக்கமைய வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரிட்சார்த்த காலத்தில் சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும்.

(iv) தகுதிகாண்/பரிட்சார்த்த கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுதல், ஏனைய விடயங்களுடன், விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரிட்சைகளில் விதிக்கப்பட்ட காலங்களுள் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். விதிக்கப்படும் காலங்களுள் இப் பரிட்சைகளில் சித்தியடையத் தவறின சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தஞ் செய்யப்படும். விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் 6 மாத காலத்துக்குள் இப்பரிட்சையில் சித்தியெய்தத் தவறின் இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட சம்பளம் நிறுத்தப்படும். பரிட்சையில் சித்தி எய்தும்வரை இச்சம்பளம் தொடர்ந்து நிறுத்தப்படும்.

(v) தகுதிகாண் பரிட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்டுள்ள சிங்கள தேர்ச்சி பெறப்படாவிடின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிர்வாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும், தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்படுவோருக்கு iii ஆம், iv ஆம், v ஆம் நிபந்தனைகள் அமையமாட்டா.

(2) (i) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இரண்டாவது வினைத்திறமைகாண் பரிட்சையில் தேறமுன் நிறைவேற்று எழுதுவினைஞர் சேவை இரண்டாம் வகுப்பு உத்தியோகத்தருக்கு விதிக்கப்பட்டுள்ள தேசிய மொழிகளிலான பரிட்சையில் (தமிழ் உத்தியோகத்தர்கள்) சிங்களத்திலும், (சிங்கள உத்தியோகத்தர்கள்) தமிழிலும் தேற வேண்டும். இரண்டாவது வினைத்திறமைகாண் தடையில் சித்தியெய்திய உத்தியோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறமைகாண் தடைக்கு மேலே செல்லுமுன் மேற்குறித்த பரிட்சையில் தேறவேண்டும். அங்ஙனம் தவறுமிடத்து அவர்களுடைய சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். அனுமதிக்கப்பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் பின்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றில் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள், நிதிப் பிரமாணங்கள் கல்விச் சட்டம் ஆகியவற்றிலான வினாத்தாள்களைக் கொண்ட ஒரு பரிட்சையில் சித்தியெய்த வேண்டும். அனுமதிக்கப்பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும். இப்பரிட்சை சம்பந்தமான பிரமாணங்கள் அனுபந்தத்தில் கொடுபட்டுள்ளன.

(iii) சேவையில் தொடர்ந்து வைக்கப்படுதற்கு பெண் உத்தியோகத்தர் ஒருவர் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து அவருடைய சேவை தகுதிகாண்/பரிட்சார்த்த காலத்தில் அல்லது அக்கால முடிவில் நிற்பாட்டப்படுதற்கு அவர் பாத்திரராவர்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் வேண்டப்படுதற்கமைய தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும்.

(v) நியமதாரி அரசினர் சேவைக்கு உரிய முறைப்படி நியமிக்கப்படுவோராயின் அரசகரும மொழிக் கொள்கை நோக்கங்களின் பொருட்டு, பதவியில் உறுதிப்படுத்தப்படும் திகதியிலிருந்து 2 வருட காலத்துக்குள் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தரத்தைய தேர்ச்சி மட்டத்தில் விதிக்கப்படும் வினைத்திறமைகாண் தடைப் பரிட்சையில் சித்தியெய்த வேண்டும். இப்பரிட்சையில் சித்தியெய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும்.

**4. சம்பளங்களும் சகாயப்படிகளும் :**

இப்பதவிகளுக்கான ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

பட்டதாரிகளுக்கு—ரூ. 6,024—4 × 144—8 × 180—6 × 240—9,480 வருடாந்தம். ரூ. 6,780, ரூ. 7,500, ரூ. 8,280 ஆகியவற்றிற்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

பட்டதாரிகளல்லாதவர்களுக்கு—ரூ. 5,016—11 × 144—5 × 180—7,500 வருடாந்தம். ரூ. 5,880, ரூ. 6,780 ஆகியவற்றிற்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

**5. தேவைப்படும் தகைமைகள் :**

(அ) 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாடு அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது).

(ஆ) பட்டதாரிகளைப் பொறுத்தவரையில்—

(i) மனையியல் படிப்பித்தலில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்ற பயிற்றப்பட்ட மனையியல் பட்டதாரியாய் இருக்கவேண்டும்,

அல்லது

(ii) மனையியல் படிப்பிப்பதில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் பெற்ற மனையியல் பட்டதாரியாக இருக்கவேண்டும்.

(இ) பட்டதாரிகள் இல்லாதவர்களைப் பொறுத்தவரையில்—

(i) மனையியல் படிப்பிப்பதில் 10 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்ற 1 ஆம் வகுப்பு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்க வேண்டும், அல்லது

(ii) மனையியல் படிப்பிப்பதில் 15 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்ற 1 ஆம் வகுப்பு ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றவராக இருக்கவேண்டும், அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு மனையியல் நிலையத்தில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத கால பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பின் வழங்கப்பட்ட ஒரு தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் மனையியல் படிப்பிப்பதில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சி. பா. த. ப. பரிட்சையில் அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரிட்சையில் அல்லது யாதேனும் உயர்ந்த ஒரு பரிட்சையில் சிங்கள மொழிமூல அபேட்சகர்கள் சிங்கள மொழியில் அல்லது இலக்கியத்தில், தமிழ் மொழிமூல அபேட்சகர்கள் தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (குறிப்பு—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர்தொழில் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(இ) விண்ணப்பதாரியின் கல்வித் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதி ஆகியவை பற்றிய சமீபகால மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

(குறிப்பு—ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ள அபேட்சகர்கள் இவ்வுப பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.)

7. இவ்வரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி, II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையிலான பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையவுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

8. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஒன்றும் விநியோகிக்கப்படமாட்டா. விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக் கமையத் தயாரிக்கப்பட வேண்டும்.

9. அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அவை விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் போதிய காரணங்காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவரால் சிபார்சு செய்யப்பட்டால் அன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அது பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலிருந்து 3 வாரங்களுக்குள் அத்தகைய அறிவித்தலை பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 2, கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இத்தேவைக்கமைய ஒழுகத்தவறும் விண்ணப்பதாரி தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்

பீ. உடகம,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

எண் : பொ. நி./22/145,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970.9.3.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**மனையியல் வட்டார வித்தியாதிகாரி பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (தெளிவாக எழுதவும்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. 30.9.1970 அன்றுள்ளபடி சரியான வயது :— வரு. : மா. : நா. :
4. சாதியமும் அது எங்ஙனம் பெறப்பட்டதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் : —
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப்பூட்டன் : ————.
6. சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறீரா ? (சித்தியடைந்திருப்பின் தராதரப் பத்திரத்தின் பெயரையும் எம்மொழிமூலமெனவும் குறிப்பிடவும்) : ————.
7. மனையியலில் பெற்றுள்ள தகைமைகள் (தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்) : ————.
8. சிங்கள/தமிழ்/ஆங்கில மொழியில் பெற்றுள்ள அறிவு : ————.
9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.
10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின் பதிவிலக்கம், பாடசாலைப் பெயர் தற்போதைய வருடாந்தச் சம்பளம், சம்பள அளவுத் திட்டம் அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக்குறிப்பிடவும்) : ————.
11. விஞ்ஞானம் படிப்பிப்பதில் பெற்றுள்ள அனுபவம் (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) : ————.

| பாடசாலைகளின்/கல்லூரிகளின் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக்காலம் | | | விலகியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மா. | நா. | |
| | | | | | | | |

12. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் உறவினராக இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும், 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்படிகளல்ல) இணைக்கப்பட வேண்டும். (அரசினர் சேவையில் உள்ளவர்கள் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை):—
13. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன் இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

9–435/2—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## கல்வி அமைச்சு

**மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் பட்டதாரி உதவி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு**

பட்டதாரி உதவி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பாக 1970 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 7 ஆந் திகதிய 14,918 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் 3 ஆம் பந்தி பின்வரும் பகுதியை விலக்குவதன் மூலம் திருத்தி அமைக்கப்படுகின்றது :—

" எனினும், எந்நியமதாரியையும் சேவைத் தேவைக்கிணங்க அல்லது நிருவாக காரணங்களையிட்டு வேறோர் மாவட்டத்துக்கு மாற்றுதற்கு இவ்வமைச்சுக்கு உரிமையுண்டு ".

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 27 ந் உ.

பீ. உடகம,
நிரந்தரச் செயலாளரும்,
மகா வித்தியாதிபதியும்.

9-317—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

இல. : வெ. மு/2/214

## கல்வி அமைச்சு

### பட்டப்பின் புலமைப் பரிசில்கள் ; செக்கோசிலவேக்கியா—1970/71

பிறேக் நகரத்தைச் சேர்ந்த நவம்பர் 17 ஆந் திகதிய பல்கலைக் கழகத்தால் பின்வரும் துறைகளில் பட்டப்பின் படிப்புகளுக்கென வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

எந்திரவியல்

கணிதம்

பௌதிகம்

இரசாயனம்

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ்வரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக இரண்டு வருட கால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு, செக்கோசிலவேக்கிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.70 அன்று 40 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) விரும்பும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான ஒரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டம் பெற்றிக்க வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். (எனினும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் செக்கோசிலவேக்கியா மொழியில் ஓர் ஆரம்பப் பயிற்சி நெறியைப் பின்பற்ற வேண்டும்).

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1970 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) செக்கோசிலவேக்கியாவுக்கு போகவும், பயிற்சி நெறியைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்தபின் திரும்பி வருதற்குமான பிரயாணச் செலவு.

(ஆ) விதிக்கப்பட்ட ஒரு மாதாந்தத் தொகை.

(இ) இலவச வைத்திய சிகிச்சை.

(ஈ) இடவசதிகள்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செலவுகள்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், செக்கோசிலவேக்கியாவுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும், வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் செக்கோசிலவேக்கியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் அரசாங்க ஊழியரைப் பொறுத்தவரையில் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில், புலமைப் பரிசிலைப் பூர்த்திசெய்து கொண்டு திரும்பியபின் உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டபின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகையிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகக் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றும் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்கவேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பீ. உடகம,
நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 4 ந உ.

9-470—11.9.1970 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

இல.: வெ.மு/4/106.

## கல்வி அமைச்சு

### ஐக்கிய இராச்சியத்தில் 1971/72 ஆம் ஆண்டு செல்லுபடியான பொது நலவரசு ஆசிரிய பயிற்சிக் கல்வித் துணைப்பணங்கள்

பொதுநலவரசு ஆசிரிய பயிற்சிக் கல்வித் துணைப்பணத் திட்டத்தின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படுமெனவும் பிரித்தானியாவிலுள்ள ஆசிரிய பயிற்சி நிலையங்களில் 1971 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் செல்லுபடியானவையுமான கல்வித் துணைப்பணங்களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் துறைகளிலான பயிற்சிக்கு இக்கல்வித் துணைப்பணங்கள் அளிக்கப்படும்.—

(அ) ஆசிரிய கற்பிப்போர்க்கான பயிற்சி நெறிகள் ;

(ஆ) பாடவிதான அபிவிருத்திப் பயிற்சி நெறிகள்.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இக்கல்வித் துணைப்பணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—கல்வித் துணைப்பணத்தால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரி சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—கல்வித் துணைப்பணங்கள் சாதாரணமாக ஒரு கழகவாண்டு அளவானதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சையில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பிரித்தானிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப கல்வித்துணைப்பணங்கள் பயிற்சி நெறிக் காலத்தின் போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் ;

(ii) 1.10.1971 அன்று 40 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும் ;

(iii) நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்துடையவையுமான நியமனங்களை வகிப்பவர்களாகவும் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(iv) ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் ;

(v) வெளிநாடுகளில் இதற்குமுன் புலமைப் பரிசிலேனும் பயிற்சியேனும் பெற்றிருக்கலாகாது ;

(vi) (அ) ஆசிரிய கற்பிப்போர்க்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவராயின், மேற்போந்த (i) தொடக்கம் (v) வரையுள்ள பந்திகளுள் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் கீழ்க்காணும் தரங்களில் எதிலேனும் அடங்க வேண்டும் ;

(1) 4.10.70 அளவில் கலாசாலை ஒன்றில் குறைந்தபட்சம் ஒருவருட சேவை பூர்த்தி செய்த ஆசிரியர் கலாசாலை அதிபர்கள்,

(2) 4.10.70 அளவில் ஆசிரியர் கலாசாலை ஒன்றில் குறைந்தபட்சம் ஒருவருட சேவை புரிந்தவர்களும், ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி ஆசிரியர்களாக, விரிவுரையாளர்களாகவுமுள்ள பயிற்றப்பட்ட பட்டதாரிகள், பட்டதாரிகள் அல்லது உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்,

(ஆ) பாடவிதான அபிவிருத்திப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவராயின், மேற்போந்த (i) தொடக்கம் (v) வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பதுடன் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்திப் பிரிவில் தற்போது கடமையாற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருக்கவேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்குச் சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஒரு அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.1971 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பிக்கலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும், நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையாராகார். படிவத்தின் 15(ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரித்தானியாவுக்குப் போய்வர மூலச் சிக்கன வகுப்புப் பிரயாணச் செலவு ;

(ஆ) தாபரிப்புக்கான ஒரு கொடை ;

(இ) சகல கற்கைச் செலவுகளும் ;

(ஈ) புத்தகங்களும் உபகரணங்களுக்குமென £ 35 கொடை ;

(உ) குளிர்தாங்கும் உடைகளுக்கென £ 50 கொடை.

குறிப்பு.—இக்கல்வித் துணைப்பணங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியாபகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின் போது தராதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. உடன்படிக்கை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும், வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து கல்வித் துணைப்பணத்தின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. வைத்தியப் பரீட்சை.—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா எனப் பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீட்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/– பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/– பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்படவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்ப வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 4 ந் உ.

9–469—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

No G. A/5/227

## கல்வி அமைச்சு

### தொழில் தரப் பதவிகள்—II ஆம் வகுப்பு

கல்வி அமைச்சில் சேவை புரியும் தகுதி பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து கீழ்க்காணும் II ஆம் வகுப்புத் தொழில் தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப் பெயர் எழுதப்படவேண்டும்.

(1) கடைச்சற்காரன்
(2) மின்சாரத் தொழிலாளர்
(3) பொருத்துபவர்
(4) தகர வேலையாளர்
(5) பொறியாளர் (வளிச் சீராக்கம்)

குறிப்பு : (1) இப்பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வெவ்வேறாக அனுப்பப்படவேண்டும்.

(2) 27.2.70 ஆந் திகதிய வர்த்தமானி விளம்பரத்துக்கிணங்க கடைச்சற்காரன், மின்சாரத் தொழிலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பியவர்கள் திரும்ப விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ஆந் திகதிய 633 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும். நியமதாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரச்கரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. சம்பள அளவுத்திட்டம் :

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகரசபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திரவியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்று திரட்டிய சம்பள அளவுத் திட்டம் : முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 8.00 விதமும் அதன்பின் ரூ. 2,640—15 × 60—ரூ. 3,540 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னராயின் ஒத்த சம்பள அளவுத் திட்டம் : முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 2.30 விதமும் அதன் பின் ரூ. 750—42 × 13—ரூ. 1,296 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாதவையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிடவர்களுக்கு—

1.10.69 தொடக்கம் காரியப்படும் ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் : முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 7.60 விதமும் அதன் பின் ரூ. 2,640—10 × 60—ரூ. 3,240 வருடாந்தம்.

1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் : முதல் ஆறு மாதங்களுக்கு நாளாந்தம் ரூ. 2.10 விதமும் அதன்பின் ரூ. 750—42 × 8—ரூ. 1,086 வருடாந்தம்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்டவேண்டும் :—

(அ) கல்வி அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள ஏதாவதொரு திணைக்களத்தில் அல்லது தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் வேலை செய்பவராக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று குறைந்தபட்சம் 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலனும் உடையவராய் இருக்க வேண்டும.

(ஈ) (1) கடைச்சற்காரன் பதவிக்கு—

(அ) எழுத வாசிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) பல்வேறு புரிகளுள்ள சில்லுகளின் மாற்றத்தைக் கணிக்கக்கூடியவராய இருக்க வேண்டும்.

(இ) வார்ப்பிரும்பு, உருக்கு, பித்தளை, அலுமினியம் ஆகியவற்றின் இயல்புகள் பற்றியும் கருவிகள், கோணங்கள், வெட்டும வேகங்கள் ஆகியவற்றில் இவற்றின் விளைவு பற்றியும் ஓரளவு பொது அறிவு பெற்றிருக்கவேண்டும்.

(ஈ) பல்வேறு வகை குளிரூட்டும் உராய்வு நீக்கிகள் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) உள்ளக, வெளியக கூம்பிகள் கடையக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஊ) பலவினப் புரிகள், V உருப் புரிகள் வெட்டக்கூடியவராயும் துறுகளையும் பட்டிகளையும் மெல்லுருக்கில் கடாவக் கூடியவராய இருக்க வேண்டும்.

(2) மின்சாரத் தொழிலாளர் பதவிக்கு—

(அ) எழுத வாசிக்கக் கூடியவராய் இருக்கவேண்டும்.

(ஆ) அளவுத் திட்டம் ஒன்றின் 1/32" அளவுக்கு வாசிக்கக் கூடியவராயும் பினைப பிரமாணங்களைப் பதிவு செய்யக் கூடியவராயும் இருக்க வேண்டும்.

(இ) அளவிடும் கருவிகள் பற்றியும் அவற்றின் உபயோகங்கள் பற்றியும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) வடங்கள், கம்பிகள ஆகியவற்றின் பாகுபாடு பற்றியும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) கம்பிகளை மூட்டும் பல்வேறு வகைகள் பற்றியும் கம்பிகள இணைத்தல் பற்றியும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) மோட்டார்களினதும் சிறிய மாற்றிகளினதும் தாவிப்புப் பரிசோதனைகளை 5 கி. வா. வரை நடத்தக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(3) பொருத்துபவர் பதவிக்கு—

(அ) அளவுத் திட்டம் ஒன்றின் 1/34" அளவுக்கு வாசிக்கக் கூடியவராயும் பினைப் பிரமாணங்களைப் பதிவு செய்யக் கூடியவராயும் இருக்க வேண்டும். (நுண்மானி வாசிக்கும் ஆற்றல மேலதிக தகைமையாகும்.)

(ஆ) இத்தொழிலுக்குரிய சகல கருவிகளினதும் பெயர்கள், உபயோகங்கள், பேணல் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(இ) நீராவி, மோட்டார், டீசெல், ஆலையமைப்பு தொடர்பான வேலைகளில் விசேடமாகத் தேவைப்படும் பொருத்துகை பற்றி நலல அறிவு பெற்றிருக்கவேண்டும்.

(ஈ) வரைதல்களை வாசித்து விளங்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(உ) திறமையான முறையில் பிசிர் நீக்கி அராவக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

(4) தகர வேலையாளர் பதவிக்கு—

(அ) அளவுத்திட்டம் ஒன்றின 1/32" அளவுக்கு வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) பற்றுசுகள், பாயங்கள் உட்பட இத்தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு பொருட்கள் பற்றிய நல்ல அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(இ) இலகுவான வரைதல்களை வாசிக்கக் கூடியவராய் இருத்தல் விரும்பத்தக்கது.

(ஈ) எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்களைச் சேமிக்கப் பயன்படுத்தப்படும் கொள்கலன்கள், தாங்கிகள் அல்லது கலன்களைப் பழுதுபார்த்தலில் எடுக்கப்பட வேண்டிய முற்காப்புக்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

(உ) சமையல் உபகரணங்களில் ஈயம் பூசுதல் பற்றிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) சிறைகள், கிராதிகள் போன்ற சேதமுற்ற பொருள்களை நேராக்கவும் அவற்றில் கம்பி அமைக்கவும் தறையவும் அறிந்திருத்தல் வேண்டும்.

(எ) பொருத்தமான இடங்களில் கதிர்வீசிகளை பழுதுபார்க்கத் தெரிந்திருக்க வேண்டும்.

(5) பொறியாளர் (வளிச்சீராக்கம்) பதவிக்கு—

(அ) வாசிக்க, எழுத அறிந்திருக்க வேண்டும்.

(ஆ) வளிசசீராக்க உதிரிப் பாகங்களைப் பழுதுபார்த்தலில் குறைந்த பட்சம் 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) அளவுத்திட்டம் ஒன்றினை 1/64" அளவுக்கு வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஈ) வளிச்சீராக்கப் பொறித் தொகுதியின் உதிரிப் பாகங்களின் பெயர்கள், உபயோகங்கள், பொறித் தொகுதியைப் பேணுதல், பழுதுபார்த்தல் என்பனபற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

(உ) இலகுவான வரைதல்களை வாசிக்க விளங்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(உ) மேற்போந்த (அ) ம், (ஆ) ம், (இ) ம், (ஈ) ம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழ்க்காணும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும். இத்தகைமைகள் முன்னுரிமைக் கிரமப்படி கொடுக்கப்பட்டுள்ளன.

(i) குறைந்தபட்சம் 3 வருடங்கள் III ம் வகுப்பில் சேவை புரிந்திருப்பதற்கமைய III ம், IV ம் வகுப்புகளில் ஆகக் குறைந்தது 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்; அல்லது

(ii) IV ம் வகுப்பில் முன்னைய சேவை உட்பட III ம் வகுப்பில் 3 வருடங்களுக்குக் குறைந்த சேவை புரிந்த உத்தியோகத்தராக இருக்க வேண்டும் ; மொத்தச் சேவை IV ம் வகுப்பில் 8 வருடங்களாக இருக்க வேண்டும். இதைக் கணிக்குமிடத்து III ம் வகுப்பில் புரிந்த ஒவ்வொரு வருட சேவையும் IV ம் வகுப்பில் 2 வருட சேவையாகக் கணிக்கப்படும் ; அல்லது

(iii) III ம் வகுப்பில் குறைந்தபட்சம் 2 வருடங்கள் சேவை புரிந்திருப்பதுடன் (அ) II ம் வகுப்பு தொழில் பயில்வோனாக 3 வருட சேவை அல்லது (ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில III ம் வகுப்பில் 6 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(iv) குறைந்தபட்சம் IV ம் வகுப்பில் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(v) மேலுள்ள 4 (அ) ம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் எதிலேனும் III ம் அல்லது IV ம் வகுப்பில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் தொழில் பயில்வோனாகக் குறைந்தபட்சம் 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்.

(மேலுள்ள i ம், ii ம், iii ம், iv ம் உப பந்திகளில் அடங்கும் வேலையாளர் இல்லாதவிடத்தே இவ்வகுதியில் அடங்குபவர்கள் சேர்த்துக்கப்படுவார்கள். முன்னைய சேவை அத்தாட்சிப் பத்திரங்களால் நிரூபிக்கப்படவேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் தொழில் பயில்வோராக புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்:—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்.

(ஆ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமைப் பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(இ) மேற்போந்த 4 (உ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்.

(ஈ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

குறிப்பு : (i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சேர்த்துக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத்தவறும் அபேட்சகர்கள், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு,

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970.9.3.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**தொழிலாளர் தரப் பதவிக்கான விண்ணப்பம்**

(8½″ × 13½″ அளவுத் தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படவேண்டும்)
**விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் : ————.**

1. முழுப் பெயர் (தெளிவாக) : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. சொந்த இடம் : ————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————.
   பிறந்த திகதி : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் ; ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினலா பதிவு காரணமாகவா ? : ————.
7. கல்வித் தகைமைகள் :
   (i) பொது : ————.
   (ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் :———.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையங்கள், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்படவேண்டும்) : ————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு ?: ————.
12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
   (அ) படைக்கூற்றின் பெயர் : ————.
   (ஆ) வகித்த பதவி : ————.
   (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா, அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் : ————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :
   (i) வகித்த பதவி : ————.
   (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
   (iii) விலகியதற்கான காரணம் : ————.
15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.
16. தற்போதைய உத்தியோகம் :
   நிலையம் : ————.
   (i) பதவிப் பெயரும் தரமும் : ————.
   (ii) நியமனத் திகதி : ————.
   (iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா : ————.
   (iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
   (v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.
17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

எனது இல :
உங்கள் இல : பொ.நி/5

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின்முன்/பின்* இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

............ இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/*பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————,
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

9–436—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## விலைமதிப்புத் திணைக்களம்

### படம் வரை தொழில் பயில்வோன் பதவி (தற்காலிகமானது)

விலைமதிப்புத் திணைக்களத்தில் ஒரு படம் வரை தொழில் பயில்வோன் பதவிக்கான வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம் போன்று, சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து, 25.9.1970 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக, கொழும்பு 1, கபூர் கட்டடம், 3 ஆம் மாடியிலுள்ள பிரதம விலை மதிப்பாளரை அடையக்கூடியதாக, பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் உறையில் இடது கைப்பக்க மேல் மூலையில், "படம் வரை தொழில் பயில்வோன் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

2. சம்பளம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவு—முதல் வருடம்—ஆண்டுக்கு ரூபா 3,019/20. இரண்டாவது வருடம்—ஆண்டுக்கு ரூபா 3,134/40.

3. ஆட்சேர்க்கும் முறை.—இந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட தேர்வுச் சபையினால் தகுதியாகவுள்ள பரீட்சார்த்திகள் நேர்முகமாகப் பரீட்சிக்கப்படுவார்கள்.

4. நியமன திகதிகள்.—

(அ) இப்பதவி தற்காலிகமானது. அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

(இ) இத்திணைக்களத்தினால் அளிக்கப்படும் பயிற்சி நெறியை, ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் தொடர்வதற்கும், பயிற்சி முடிவடைந்ததும், தேவைப்படின் தரம் II படம் வரை அறிஞராக ஐந்து வருடங்களுக்குக் குறையாது அரசாங்கத்துக்கு சேவை செய்வதற்கும், இத்திணைக்களத்

றுடன் பரீட்சார்த்தி ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு வேண்டப்படுவார். நியதிகளையும், நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யுமுகமாக தொழில் பயில்வோனும், அவரது பெற்ருர் அல்லது பாதுகாவலரும் இருபிணை நிற்போரும் ரூபா 2,000 க்கு ஒரு முறி எழுதுமாறு வேண்டப்படுவர்.

(இ) பிரதம விலை மதிப்பாளர் காலத்துக்குக் காலம் குறிப்பிடுகிற மாதிரி இரு வருடங்களுக்குக் குறையாது செய்முறைப் பயிற்சியை மேற் கொள்ளுமாறு அவன்/அவள் வேண்டப்படுவர். அப்படியான பயிற்சியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்தும், குறிப்பிட்ட திணைக்களத் தொழில் நுட்பப் பரீட்சையில் சித்தியடைந்ததும், உள்ள பரீட்சார்த்திகள் II ஆம் தர படம் வரை அறிஞர் பதவிக்கு நியமனம் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். ஆனல் அப்படியான நியமனம் தரப்படுமென ஒரு உத்தரவாதமும் அளிக்க முடியாது.

(ஈ) அவனது/அவளது வேலையும் நடத்தையும் திருப்திகரமற்றதாக இருந்தால், தொழில் பயிலும் காலத்தில், எத்தருணத்திலும், வேலையிலிருந்தும் நிறுத்தப்படலாம்.

5. வேண்டப்படும் தராதரங்கள்.—(i) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் 25.9.70 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவரென்றும் 25 வயதுக்கு மேற்படாதவரென்றும் திருப்திகரமான சான்றுகள் காட்டுதல் வேண்டும்.

(ii) கணிதத்தில் (என் அல்ல) திறமைச் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் பரீட்சார்த்திகள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் செய்முறை நுண்கலை நிலையத்தில் திருப்திகரமாக ஒரு வருட முழு நேர நெறியை (படம் வரை அறிஞருக்கான பகல் நேர நெறி) பூர்த்தி செய்தும், அதன் இறுதியில் குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.

6. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றின் பிரதிகளை தங்களின் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பெற்றுள்ள கல்வித் தராதரங்களின் பத்திரங்கள் ;

(ஆ) தராதரம், குணம், நியமனத்துக்கான தகுதி சார்பாக அண்மையில் பெற்றுள்ள மூன்று நற்சான்றுப் பத்திரங்கள் ;

(இ) பதிவாளர் தலைமை அதிபதியினல் வழங்கப்பட்ட "வயது சார்பான விசேட சான்றுப் பத்திரம்" (கிடைக்கக் கூடுமானல்) அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

குறிப்பு.—பின்னெரு திகதியில், பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை அல்லது வயது சார்பான விசேட சான்றுப் பத்திரத்தை சமர்ப்பிக்கும்படி பரீட்சார்த்தி வேண்டப்படுவர்.

7. நிர்வாகப் பிரமாணம் 109 இன் பிரகாரம், அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள்/நிலையங்கள் ஆகியனவற்றின் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள திகதியின் பின்னர் இவ்வலுவலகத்தை வந்தடையும் அப்படியான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனலும் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னராக விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கால தாமதப்படுத்தியதற்கு தகுதியான காரணம் காட்டி, விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளுமாறு, திணைக்கள/கூட்டுத்தாபன/நிலையத் தலைவர் சிபார்சு செய்து அனுப்புவாராயின் ஏற்றுக் கொள்ளப்படும்.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II ன் முற் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான பொது நிபந்தனைகளையும் பார்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விலைமதிப்புத் திணைக்களம், ம. பி. பி. அபயகுணவர்த்தன,
3 வது மாடி, கபூர் கட்டடம், பிரதம விலைமதிப்பாளர்.
கொழும்பு 1. 3 செத்தெம்பர். 1970.

### விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம்

### படம் வரை தொழில் பயில்வோன் பதவிக்கான விண்ணப்பம் (தற்காலிகமானது)

### விலைமதிப்புத் திணைக்களம்

1. முழுப் பெயர் :———.
(தனி எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :———.

3. (அ) வயது :———.
(ஆ) பிறந்த திகதி :———.

4. பிறப்பிடத்தின் பெயர்—
(அ) விண்ணப்பதாரர் :———.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :———.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :———.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழி மூப்பாட்டன் :———.

5. வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா நீர் இலங்கைப் பிரசை :———.

6. விவாகமானவரா அல்லது இல்லையா :———.

7. கல்வித் தராதரங்களும் கடைசியாகச் சித்தியடைந்துள்ள பரீட்சையும் அதன் பாடங்களும் :———.

8. தேசிய மொழிகளை வாசிக்கவும், எழுதவும் கூடிய ஆற்றல் ———.

9. கல்வி நெறி சார்பாக பாடசாலைகளில் சேர்ந்த, விலகிய திகதிகள், பயின்ற கல்லூரிகள், சித்தியடைந்த பரீட்சைகளும், பாடங்களும், அதன் திகதிகளும், பெற்றுள்ள பரிசில்கள், புலமைப் பரிசில்கள் :———.

10. பாடசாலையில் அல்லது கல்லூரியில் உடற் பயிற்சி விளையாட்டுக்கள், மேலதிக பாடவிதான விடயங்களில் பங்கு கொண்ட விபரங்கள் :———.

11. திகதிகளுடனும், சேவையின் முழு விபரங்களுடனும், பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர் வகித்த தொழில்களைக் கூறுக :———.

12. ஏதும் விசேட தராதரங்களின் விபரங்கள் (உ-ம். உயர் தொழில், தொழில் நுட்பம் ஆகியன) :———.

13. நற்சான்றுப் பத்திரங்கள் தந்தவர்களின் பெயர்களும், அவர்களின் பதவிகளும் (மூலப் பத்திரங்களை இணைக்கப் படாது. பிரதிகளை மட்டும் இணைக்கவும்) :———.

14. யுத்த சேவையின் விபரங்கள் ஏதுமிருப்பின் :———.

15. கடன் பணமுடையற்றவரா :———.

16. வேறு ஏதும் விபரங்கள் :———.

இவ்விண்ணப்பத்தில் என்னல் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையும், உண்மையானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதன்கண் அடங்கியுள்ள ஏதும் விபரங்கள் பிழையானதாக அல்லது பொய்யானதாகக் காணப்பட்டால், தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமனத்துக்குப் பின்னர் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையெனக் கண்டு பிடிக்கப்பட்டால், நட்ட ஈடின்றி வேலைநீக்கம் செய்யப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

திகதி :——— ———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

9-452—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### பிரதான சட்டப்பணியாளர் பதவி

மேற்கூறப்பட்ட பதவிக்கு இலங்கைவாசிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்.—(அ) உயர் நீதிமன்றத்தில் பத்துவருட அனுபவம் பெற்ற பிரக்கிராசியார் (Proctor).

(ஆ) வயது.—நாற்பத்தைந்திற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்.—ரூபா 1,250—50—1,750

இச்சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான முனையில் விண்ணப்பதாரியின் அனுபவத்திற்கமையச் சம்பள நிர்ணயம் பரிசீலனை செய்யலாம்.

சேமலாபநிதி.—ஊழியர் 10 சத வீதமும் ஸ்தாபனம் 15 சதவீதமுமாக அனுசரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளருக்குப் 15.9.70 க்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

கூ. மொ. விற்பனவு ஸ்தாபன தலைமைக் காரியாலயம்,
21, வக்சால் வீதி,
கொழும்பு–2,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 28 ந் உ.

9–369—11,9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

இல. வெ. மு/3/186

## கல்வி அமைச்சு

### ஐக்கிய சோவியத் சமூகவுடமைக் குடியரசில்

### செல்லுபடியான பட்டப்பின் புலமைப் பரிசில்கள்—1970 ஆம் ஆண்டு

ஐக்கிய சோவியத் சமூகவுடமைக் குடியரசில் (உயர் கல்வித் தாபனங்களில்) செல்லுபடியான பட்டப்பின் புலமைப் பரிசில்களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கற்கைத் துறைகள் வரையறுக்கப்படவில்லை.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்து கொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **கால எல்லை.**—புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2-3 வருடகால அளவினதாகும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு ஐ. சோ. ச. குடியரசு அதிகாரிகளின் தற்றுணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படிவேண்டப்படலாம்.

3. **தகவுத்திறன்.**—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.10.70 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) விரும்பும் கற்கை நெறிக்குப் பொருத்தமுடைய பாடங்களில், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் 2 ஆம் வகுப்புப் பட்ட மேனும் பெற்றிருக்க வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். (எனினும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ருஷிய மொழியிலான ஓர் ஆரம்ப பயிற்சி நெறியைப் பின்பற்ற வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றனர்).

குறிப்பு 1. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.70 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2. தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) ஐ. சோ. ச. குடியரசுக்குப் போவதற்கான பயணச் செலவு, திரும்பி வருவதற்கான பயணச் செலவை புலமைப் பரிசில் பெறுவோர் அங்கு அவர்கள் சேமிக்கும் பணத்தைக்கொண்டு பொறுக்க வேண்டும்.

(ஆ) இலவச கற்கை.

(இ) ஒரு புலமைப் பரிசில் கொடை.

(ஈ) விடுதி வசதி.

(உ) இலவச மருத்துவ சிகிச்சை.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முக பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐ. சோ. ச. குடியரசுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐ. சோ. ச. குடியரசில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரிசீலித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீளக்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிவையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2 மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப் பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செட்டெம்பர் மீ 6 ந் உ.

9-533—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923.

---

## தேசிய பாற் சபை

தேசிய பாற்சபையின் சேவையின் கீழேயுள்ள பதவிகட்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டுக் கீழே கையொப்பமிட்டவருக்கு 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்—தரம் IV

(அ) தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திருத்திகரமாக அத்தாட்சிப்படுத்த வேண்டியதாவது, அவர்—

(1) 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ம் திகதி 30 வயதிற்குக் குறையாதவராயும், 45 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளார்.
(2) சிறந்த ஒழுக்கமும் நல்ல உடல் நிலையும் உள்ளார்.
(3) (அ) குறைந்தது சி. பா. த. பத்திரப் பாட்சையோ அல்லது அதற்கு சமமானதோ,

அல்லது

(ஆ) அரசாங்கத்தில் அல்லது வணிகத்தாபன மொன்றில் பத்து வருடம் மேற்பார்வையாளராக அனுபவமும், சிங்களத்தில் உடர் திறமையும், ஆங்கில அறிவும் உள்ளவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்யும் பொழுது விளையாட்டு வீரர்களுக்கும், படைக்கலந்தாங்கிய சேவையில் இருந்தவர்களுக்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(ஆ) சம்பளத்திட்டம்.—மாதாந்தம் ரூபா 600—10 × 40—ரூபா 1,000 (எல்லாம் உட்பட).

3. போர்மன்—தரம் VI (மோட்டார் வேலைக்களம்)

(அ) தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திருத்திகரமாக அத்தாட்சிப்படுத்த வேண்டியதாவது, அவர்—

(1) 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ம் திகதி 30 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளார்.
(2) சிறந்த ஒழுக்கமும் நல்ல உடல் நிலையுமுள்ளார்.
(3) (அ) குறைந்தது கனிட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் அல்லது 8 ம் வகுப்புத் தராதரப்பத்திரம்,
(ஆ) பெற்றோல், டீசல், ஆகியவற்றால் இயங்கும் எல்லாவகையான மோட்டார் வாகனங்களையும் இயக்குதலிலும் பேணுதலிலும் குறைந்தது பத்து வருடச் செய்முறை அனுபவமும், காய்ச்சியிணைத்தல், தகரவேலை, கம்மாலைவேலை, இயக்குதல்கள், டைனமோ, ஒழுங்காக்கிகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல் ஆகியவற்றில் அனுபவமும் உடையவராக இருக்கவேண்டும்.
(4) பிரிவில் குறிப்பிட்ட தகுதியில் மேற்பார்வையாளராக 5 வருடத்திற்கு மேற்பட்ட அநுபவம் இருக்க வேண்டும்.

(ஆ) சம்பளத்திட்டம்—மாதாந்தம் ரூபா 325—14 × 15—2 × 20—ரூபா 575 (எல்லாம் உட்பட).

4. பாதுகாப்பு உதவியாளர்கள்—தரம் VII

(அ) தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திருத்திகரமாக அத்தாட்சிப்படுத்த வேண்டியதாவது, அவர் :—

(1) 1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ம் திகதி 25 வயதிற்குக் குறையாதவராயும், 40 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளார்.
(2) சிறந்த ஒழுக்கமும் நல்ல உடல் நிலையும் உள்ளார்.
(3) குறைந்தது சி. பா. த. பத்திரப்பாட்சையோ அதற்குச் சமமானதோ.

அல்லது

அரசாங்க அல்லது வணிக சேவையில் ஐந்து வருட அநுபவமும் சிங்களம் எழுத வாசிக்கக்கூடிய திறமையும். ஆங்கில அறிவு மேலதிக திறமையாகக் கருதப்படும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்யும் பொழுது விளையாட்டு வீரர்களுக்கும், படைக்கலந்தாங்கிய சேவையில் இருந்தவர்களுக்கும் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

(ஆ) சம்பளத்திட்டம்.—மாதாந்தம் ரூபா 250—20 × 10—ரூபா 450 (எல்லாம் உட்பட).

5. ஒப்பந்த நிபந்தனைகள்.—இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

6. சேவை நிபந்தனைகள்.—(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட விடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 43 அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர்கள் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப் பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தறபோதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

(7) மருத்துவச் சோதனை.—நியமனம் பெறுபவர் மருத்துவச் சோதனையில் தேறுதல் வேண்டும்.

(8) விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்க.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) மிகக் கூடிய கல்விச் சான்றிதழும் உயர் தொழிற் தகைமைச் சான்றிதழ்களும் ;

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்கள்.

விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், தேசிய பாற்சபைத் தலைமைக் காரியாலயம், 33, எலிபாங் தெரு, கொழும்பு 5 என்ற விலாசத்துக்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக் கூடாது.

தலைவர்,
பாற் சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
33, எலிபாங் தெரு,
கொழும்பு 5,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 4 ந் உ.

### விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர் :————.
2. தனிப்பட்ட முகவரி :————.
3. விண்ணப்பதாரரின் பிறந்த திகதியும், இடமும் :————.
   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறந்த இடம் :————.
5. மிகக் கூடிய கல்வித் தகைமைகளும் உயர் தொழிற்றகைமைகளும் : ————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
6. சிங்களம்/தமிழ் அல்லது/ஆகியவற்றில் அறிவு :————.
7. முன் அனுபவ விபரங்கள் :————.
8. இன்றைய உத்தியோக விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் நற்சான்று சார்பாகச் சான்றுபகரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

9-471—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கல்வி அமைச்சு

### பல்கலைக் கழகங்களில் கலைமானி/விஞ்ஞானமானி (பொது, விசேட)/கலை முதுமானி (கல்வி) வகுப்புக்களை மேற்கொள்தற்கும் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தகத்துறை டிப்ளோமா வகுப்பு மேற்கொள்ளுதற்கும் ஆசிரியர்களுக்குப் படிப்பு லீவு—1970 ஆம் ஆண்டு

இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை, இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு, வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களில், கலைமானி/விஞ்ஞானமானி (பொது, விசேட)/கலை முதுமானி (கல்வி) பட்ட வகுப்புக்கள் படிக்கவும், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் வர்த்தக டிப்ளோமா செய்யவும், கீழ்வரும் தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கீழ்க்காணும் படிவ முறையில், தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் பாடசாலைத் தலைவர் மூலம் கல்வி அமைச்சின் நிரந்தரச் காரியதரிசிக்கு (விலாசம் : கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2), 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் மேல் “படிப்பு லீவுக்கான விண்ணப்பம்” என்ற சொற்கள் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. பின்வரும் தகைமைகளை அவர்கள் பூர்த்திசெய்யுமிடத்து மட்டுமே 1970 ஆம் ஆண்டு உள்ளக வகுப்புகளைப் பின்பற்றுதற்கு ஆசிரியர்களுக்குப் படிப்பு லீவு அனுமதிக்கப்படும்.

(அ) 1.10.70 அன்று 45 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்,

(ஆ) க. பொ. த (உயர்தர) பத்திரப்பரீட்சையில் பின்வரும் பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பட்டப் பரீட்சைக்கு அவற்றை எடுக்கவேண்டும் :—

இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம், புவியியல்,

அல்லது

ஒரு பல்கலைக் கழக பொது கலை/விஞ்ஞான தகைமைப் பரீட்சையில் அல்லது இடைமானிப் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் குறைந்தபட்சம் ஒன்றில் சித்தியடைந்திருப்பதுடன் அதனைப் பட்டப் பரீட்சைக்கு எடுக்க வேண்டும் :—

இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம் அல்லது புவியியல்,

குறிப்பு —(i) பந்தி 2 (ஆ) கலை முதுமானி (கல்வி), வர்த்தகத் துறையில் டிப்ளோமா செய்பவர்களுக்கு அமையமாட்டா ;
(ii) பட்டப் பரீட்சைக்கு புவிவரலாற்றியல் ஒரு பாடமாக எடுக்கப்படலாம்.

3. பின்வரும் பகுதிகளில் அடங்கும் ஆசிரியர்களுக்கு படிப்பு லீவு வழங்கப்படமாட்டாது :—

(அ) மாணவ ஆசிரியர்கள்;

(ஆ) 1.10.1970 அன்று குறைந்தபட்சம் ஒரு வருட சேவையாவது புரிந்திராத ஆசிரியர்கள் (மாணவ ஆசிரியராக ஒருவர் புரிந்துள்ள சேவை இந்நோக்கத்தின் பொருட்டு கணிக்கப்படமாட்டாது) ;

(இ) அவர்களுக்கு எதிரான ஒழுக்க நடவடிக்கை விசாரணைகள் யாதேனும் முடிவுறாத நிலையில் இருக்கும் ஆசிரியர்கள் ;

(ஈ) பல்கலைக் கழகங்களில்/தொழில்நுட்பக் கல்லூரியில் வெளியக வகுப்புகளை மாத்திரம் பின்பற்றுதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் ;

(உ) கல்வி வருடத்தின் ஆரம்பத்தில் உள்ளக மாணவர்களாகத் தெரிவு செய்யப்படாத ஆசிரியர்கள் ;

(ஊ) சிறப்புப் பட்ட வகுப்புகளுக்கு அல்லது பட்டம் பெற்ற பின்னரான பட்ட வகுப்புகளுக்கு இட்டுச் செல்லும் வகுப்புகளைப் பின்பற்ற உத்தேசிக்கும் ஆசிரியர்கள் (கல்வி டிப்ளோமா அல்லது கலை முதுமானி (கல்வி) வகுப்புகளைப் பின்பற்றுவோருக்கு இது அமையாது) ;

(எ) யாதேனும் ஒப்பந்தம் செய்துள்ள ஆசிரியர்கள் (வித்தியா பகுதியில் எட்டு வருடங்களுக்குக் கடமைபுரிவதாக ஒப்பந்தம் செய்துள்ளவர்களும் பயிற்சிக்கான செலவு ரூபா 10,000 க்கு மேற்படாதவர்களுக்குமான ஆசிரியர்கள், படிப்பு லீவு நோக்கங்களுக்காக, ஐந்து வருடங்களுக்கு மட்டுமே ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கருதப்படுவர். இதற்கிணங்க எட்டு வருட ஒப்பந்தம் செய்து ஆனால் ஐந்து வருடங்கள் பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்கு படிப்பு லீவு வழங்கப்படமாட்டாது).

பிரேமதாச உடகம,
நிரந்தரச் செயலாளரும்,
மகா வித்தியாதிபதியும்.

இல: பொ. தி/17/292,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 2 ந் உ.

### (மாதிரி விண்ணப்பப் படிவம்)

கலைமானி/விஞ்ஞானமானி (பொது விசேட)/முதுமானி (கல்வி) வர்த்தகத் துறையில் டிப்ளோமா பயில்வதற்கு படிப்பு லீவுக்கான விண்ணப்பம்

1. (அ) முழுப்பெயர் :————.
   (ஆ) பதவி :————.
   (இ) பால் :————.
   (ஈ) தற்போதைய மாதாந்தச் சம்பளம் :————.
   (உ) சம்பள விகிதம் :————.
2. ஆசிரியராகப் பதிவு இலக்கம் (இருப்பின்) :————.
3. பிறந்த திகதி :————.
4. சொந்த விலாசம் :————.
5. ஆசிரியர் கடமை புரியும் பாடசாலைப் பெயரும் விலாசமும் :————
   (மாவட்டக் குறியீட்டெழுத்துடன்)
6. கல்வித் தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும் :————.
7. (அ) 1.10.70 வரையுள்ள முழுச் சேவைக்காலம் :————.
   வரு :————. மா :————.
   (ஆ) 1.10.70 வரையுள்ள சேவை விபரம் :————.
   (மாணவ ஆசிரியராகப் புரிந்த சேவை புறம்பாகக் குறிப்பிடவேண்டும்)

| பாடசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1 :————. | ————. | ————. |
| 2 :————. | ————. | ————. |
| 3 :————. | ————. | ————. |

8. ஆசிரியர் கலாசாலை ஒன்றில் யாதேனும் பயிற்சி வகுப்பு பின்பற்றிய பின் வகுப்பின் காலத்தையும் ஆசிரியர் கலாசாலையின் பெயரையும் குறிப்பிடுக—

| ஆசிரியர் கலாசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|
| ———. | ———. | ———. |

9. அத்தகைய வகுப்பு பின்பற்றிய தொடர்பில் நீர்செய்துகொண்ட ஒப்பந்தம் (யாதேனும் இருப்பின்) :———.

| தொடக்கம் | வரை |
|---|---|
| ———. | ———. |

10. வேறு யாதேனும் பயிற்சி நெறி மேற்கொள்ளுதற்கு படிப்பு லீவு பெறப்பட்டதா? அப்படியாயின் அத்தகைய லீவுக்காலமும் அது பெற்ற நோக்கமும் கொடுபட வேண்டும் :———.

11. அத்தகைய ஒரு வகுப்புப் பின்பற்றிய தொடர்பில் நீர் செய்து கொண்ட ஒப்பந்தம் (யாதேனும் இருப்பின்) :

| தொடக்கம் | வரை |
|---|---|
| ———. | ———. |

12. ஆசிரியர் கலாசாலை எதிலேனும் தற்போது நீர் ஒரு பயிற்சிநெறியை பின்பற்றிக் கொண்டிருப்பின் அது ஆரம்பமான திகதியையும், ஆசிரியர் கலாசாலையின் பெயரையும் குறிப்பிடுக :———.

13. 1970 ஆம் ஆண்டு அனுமதிக்கப்படுதற்கு எப்பல்கலைக் கழகத்துக்கு தொழில்நுட்பக் கல்லூரியில் தெரியப்பட்டிருக்கிறீர் (அத்தகைய தெரிவு பற்றிய உமது கடிதத்தின் பிரதியை இணைக்கவும்) :———.

14. பல்கலைக் கழகத்தில்/தொழில் நுட்பக் கல்லூரியில் நீர் பின்பற்ற விரும்பும் பயிற்சி நெறியும் எம்மொழிமூலம் படிக்க விரும்புகிறீர் எனவும்—

| பாடங்கள் | மொழி |
|---|---|
| 1 : | |
| 2 : | |
| 3 : | |
| 4 : | |

15. (அ) பல்கலைக் கழகப் புகுமுக /க. பொ. த. (உயர்தர)/தொழில் நுட்பக் கல்லூரி புகுமுகப் பரீட்சைகளில் சித்தி எய்திய பாடங்களும் வருடமும் :———.

(ஆ) பொது கலை/விஞ்ஞான தகைமைப் பரீட்சையில் அல்லது இடைமானிப் பரீட்சையில் சித்தி எய்தியபாடங்களும் வருடமும்: ———.

16. பயிற்சி நெறி ஆரம்பிக்கும் திகதி :———.

17. பயிற்சி நெறிக்காலம் :———.

18. (அ) கடந்த 5 வருட காலத்தில் யாதேனும் ஒழுக்க நடவடிக்கை சம்பந்தமான விசாரணைக்குள்ளாகினீரா? அங்ஙனமாயின் வித்தியா பகுதிக் கடிதங்களின் தொடர்பு இலக்கத்துடன் விபரங்களைக் கொடுக்கவும்.

(ஆ) உமக்கு எதிராகவுள்ள யாதேனும் ஒழுக்க நடவடிக்கை விசாரணை முடிவடையாதிருப்பின் வித்தியா பகுதிக் கடிதங்களின் தொடர்பு இலக்கத்துடன் விபரங்களைக் கொடுக்கவும் : ———.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள எனது சேவை விபரங்களும் ஏனைய விபரங்களும் சரியானவையென நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

———.
திகதி :———. விண்ணப்பதாரியின் கையொப்பம்.
அதிபர்/தலைமையாசிரியர்/தலைமையாசிரியையின் கையொப்பம் :———.
வித்தியாலயம் :———.
திகதி :———.

* தேவையற்றவற்றை வெட்டிவிடுக.

9-437—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

இல. 1/99/11 (ஜீ)

## பதில் சுருக்கெழுத்தாளர்களாக நியமிக்கப்படுவதற்காக (சிங்களத்) தட்டெழுத்தாளர்களுக்கான (விசேட) பரீட்சை

பதில் சுருக்கெழுத்தாளர்களாக நியமிக்கப்படுவதற்காக (சிங்களத்) தட்டெழுத்தாளர்களுக்கான (விசேட) பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளரினால் 1970 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 13 ஆந் தேதியன்று நடாத்தப்படும். முழு விவரங்களுக்கு இச் செய்திமடலில் சிங்களத்தில் காணப்படும் அறிவித்தலைப் பார்க்க.

பொது நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 2 ந் வ.

எச். எஸ். வனசிங்க,
பொது நிருவாகப் பணிப்பாளர் அதிபதி.

9-474—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

எனது இல. 1/33/17 (ஜீ).

## மாற்றத்துக்குரிய (கீழ்த்தர) சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (சிங்களம்)—நவம்பர், 1969

1966.10.23 ஆந் தேதிய இல. 134 (ஜீ) ஐக் கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தின் நியதிகளின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு ரூபா 5,736 திரட்டிய சம்பள நிலைக்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கென 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் அவர்களின் பெயர்களுக்கெதிராக குறிப்பிடப்பட்டுள்ள பாடத்தில் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடம் |
|---|---|---|
| தர்மரத்தின, கே. (திருவாட்டி) | .. தொகைமதிப்பு, புள்ளிவிபரம் .. | .. சுருக்கெழுத்து, தட்டெழுத்து |
| பரர்ணந்து, எம். எம். (திருவாட்டி) | .. உண்ணாட்டு அரசிறை அலுவலகம், நீர்கொழும்பு | .. டிை |
| கமகே, என். (செல்வி) .. | .. கூட்டுறவுப் பாடசாலை, பொல்கொல்ல .. | .. டிை |
| கெகநாகே, டி. (திருவாட்டி) | .. கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | .. டிை |
| சுபசிங்க, வீ. எல். (திருவாட்டி) | .. தகவல், ஒலிபரப்பு அமைச்சு .. | .. டிை |
| வெதகே, டி. டி. (திருவாட்டி) | .. பாலியர் நீதிமன்றம், பம்பலப்பிட்டி | .. டிை |
| விதானவசம், கே. (செல்வி) | .. கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு | .. டிை |

பொது நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 30 ந் வ.

எச். எஸ். வனசிங்க,
பொதுநிருவாகத் திணைக்களப் பணிப்பாளர் அதிபதி.

9—404/1—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

எனது இல. 1/83/17(ஜி).

## மாற்றத்துக்குரிய (கீழ்த்தர) சுருக்கெழுத்தாளர் சேவையிலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)—நவம்பர், 1969

1966.10.23 ஆந் தேதிய இல. 134 (ஜி) ஐக் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை நிருபத்தின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு ரூபா 5,736 இரட்டிய சம்பள நிலைக்கு முன்னருள்ள இரண்டாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கென 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று நடாத்தப்பெற்ற தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர் அவரின் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்தில் சித்தியடைந்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் | பாடம் |
|---|---|---|
| குணரத்தின, எம். எஸ். பீ.(திருவாட்டி) | .. கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு | .. சுருக்கெழுத்து, தட்டெழுத்து |

மகாநாட்டுப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்கு தற்பொழுது தகைமையடைந்துள்ள மேற்படி பரீட்சார்த்தியும் முன்னர் தகைமையடைந்துள்ள ஏனையோரும் அடுத்த மகாநாட்டுப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்காக, பரீட்சை ஆணையாளருக்கு தங்களது திணைக்களத் தலைவர் மூலம் பதிவு அஞ்சலில் உடனடியாக விண்ணப்பித்தல் வேண்டும்.

பொது நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆ ஒகத்து மீ 30 ந உ.

எச். எஸ். வணசிங்க,
பொது நிருவாகத் திணைக்களப் பணிப்பாளர் அதிபதி.

9—404/2—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

எனது இல. 1/83/17 (ஜி).

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (சிங்களம்)—நவம்பர், 1969

1966.10.23 ஆந் தேதிய இல. 134 (ஜி) ஐக் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை நிருபத்தின் நியதிகளின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,584 இரட்டிய சம்பள நிலைக்கு முன்னருள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கென 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| டாபரே, பீ. சி. பீ. (செல்வி) .. .. | .. நிந்தகம காணி அலுவலகம், கொழும்பு 7 |
| பலிசக்கார, ஆர். பீ. (திருவாட்டி) .. | .. கச்சேரி, மாத்தறை |

பொது நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆ ஒகத்து மீ 30 ந உ.

எச். எஸ். வணசிங்க,
பொது நிருவாகத் திணைக்களப் பணிப்பாளர் அதிபதி.

9—404/3—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

எனது இல. 1/83/17 (ஜி)

## மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)—நவம்பர், 1969

1966.10.23 ஆந் தேதிய இல. 134 (ஜி) ஐக் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை நிருபத்தின் நியதிகளின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,584 இரட்டிய சம்பள நிலைக்கு முன்னருள்ள முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கென 1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதி நடாத்தப்பட்ட தகைமைப் பரீட்சையில் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த்தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

| பெயர் | திணைக்களம் |
|---|---|
| அகமது, ரி. பி. .. .. | .. உ. சே. ஆணைக்குழு |
| கூறே, டபிள்யு. ஏ. எல். (திருவாட்டி) .. | .. கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் |
| பர்ணாந்து, கே. பீ. சி. டபிள்யு. (செல்வி) .. | .. உண்ணாட்டு அரசிறை |
| கருணாதிலக, ரி. ஜி. ஏ. .. .. | .. திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு |
| குலசேகர, எஸ். (செல்வி) .. .. | .. நீர்வழங்கல், வடிகாலமைப்புப் பகுதி, உள்ளூராட்சி அமைச்சு, இரத்மலானை |
| கருணாதிலக, ஆர். (திருவாட்டி) .. | .. கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு |
| மடகுபுர, டபிள்யு. பீ. (செல்வி) .. | .. பொலிசு அலுவலகம், மாத்தறை |
| நாராயணசாமி, எஸ். (திருவாட்டி) .. | .. பொதுத் திறைசேரி, கொழும்பு 1 |
| திலகரத்தின, இ. (திருவாட்டி) .. .. | .. கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு |
| வெத்தசிங்க, ஏ. டபிள்யு. .. .. | .. உ. சே. ஆணைக்குழு |
| விஜயவிக்கிரம, எவ். சி. எம். (திருவாட்டி) .. | .. பொலிசு |

பொது நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1970 ம் ஆ ஒகத்து மீ 30 ந உ.

எச். எஸ். வணசிங்க,
பொது நிருவாகத் திணைக்களப் பணிப்பாளர் அதிபதி.

9—404/4—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

*கொழும்பு றேயல் கல்லூரிப் புலமைப் பரிசில் 1970*

*கல்லூரியின் லோரன்ஸ், ரூபசிங்க, சிசில் பெரேரா, ஹர்ஷா பண்டிதவர்த்தன ஞாபகார்த்தப் பரிசில்களுக்கான தேர்வுப் பரீட்சை நடாத்தப்படும்.*

*மனுச் செய்பவர்கள்,*

*கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் 5 விசேட சித்திகள் (credit passes) எய்தி, (உயர்தர) வகுப்பில் கற்கும் பூரண தகைமையுடையவராகவும், 1. 1. 1970 ல் 18 வயதிற்குட்பட்டவராயும் இருக்க வேண்டும்.*

*இதற்கான விபரங்களும், விண்ணப்பப் பத்திரங்களும் கல்லூரி பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் செப்டம்பர் 22 ம் திகதிக்கு முன்னராக அனுப்பப்படல் வேண்டும்.*

*போகொட பிரேமரத்ன,*
*அதிபர், றேயல் கல்லூரி.*

*9-439—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923*

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*நீர்ப்பாசனத் திணைக்களம்—கல்முனை உப பிரிவு*

*கல்முனையிலுள்ள உப பிரிவுப் பண்டகசாலைக்கு சாமான்களைக் கொண்டு சென்று ஒப்படைப்பதற்காகிய கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பிலுள்ள மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மு. ப. 10.05 மணிக்குத் திறக்கப்படும்.*

*இதற்குரிய கேள்விப் பத்திரங்களை கல்முனை, அம்பாறை, செங்கலடியிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம். இத்திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.*

*கேள்விப் பத்திரங்கள் பெற முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் தற்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும். இவை அவ் ஒப்பந்தக்காரர் கேள்விப் பத்திரங்களை அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்று அறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். கேள்விப் பத்திரங்கள் வழங்கு முன் கல்முனை, அம்பாறை, செங்கலடி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 25 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணத்தை ஓர் கச்சேரியிலும் செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்டினாலும் போதுமானது.*

*இதைப் பற்றிய மேலதிக விபரங்களை கல்முனை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.*

*சி. சண்முகராசா,*
*நீர்ப்பாசனப் பொறியியலாளர்.*

*நீர்ப்பாசனக் காரியாலயம்,*
*கல்முனை, 29.8.1970.*

*9-334—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923*

---

### தேசிய பாற்சபை

**வெற்றுப் பெட்டிகள், பைகள், கழிவுப் பால்மா ஆகியன கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம்**

ராகமவில் உள்ள வெலிசறைத் தேசிய பாற்சபை பால்மா மீள வடைக்கும் தொழிற்சாலையில் இருந்து கீழ்வருவனவற்றைக் கொள் வனவு செய்யவும், அகற்றவும் கீழே கையொப்பமிட்டவரால் 1970 ம் ஆண்டு செத்தெம்பர் 25 ம் திகதி பிற்பகல் 2 மணிவரை கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விபரம்**

1. 56 இருத்தல்கள் கொள்ளக்கூடிய 6 படைக்கடதாசி வெற்றுப் பைகள்.
2. 56 இருத்தல்கள் கொள்ளக்கூடிய 5 படைக்கடதாசி வெற்றுப் பைகள்.
3. 50 இருத்தல்கள் கொள்ளக்கூடிய 6 படைக்கடதாசி வெற்றுப் பைகள்.
4. 50 இருத்தல்கள் கொள்ளக்கூடிய 5 படைக்கடதாசி வெற்றுப் பைகள்.
5. 56 இருத்தல்கள் கொள்ளக்கூடிய வெற்றுப் பொலிதீன் பைகள்.
6. 50 இருத்தல்கள் கொள்ளக்கூடிய வெற்றுப் பொலிதீன் பைகள்.
7. மரப் பெட்டிகள்.

    22½″ × 15¾ × 9½
    21¼″ × 15″ × 11½″
    21″ × 15¾″ × 9¾″
    20¼″ × 13″ × 12″
    19¼″ × 15″ × 13¼
    18¼″ × 18¼″ × 13¾″
    18¾″ × 14½″ × 9⅝″
    18⅛″ × 17⅞″ × 13″
    17¾″ × 12½″ × 9¾″
    17″ × 16″ × 11″

8. உருக்குப் பட்டிகள்.
9. ஆடை நிறைந்த பால் மாக் கழிவு.
10. 2½ இருத்தல்கள் கொள்ளக்கூடிய பழுதான வெற்றுப் பால் மாத் தகரங்கள்.
11. 1 இருத்தல் கொள்ளக்கூடிய பழுதான வெற்றுப்பால் மாத் தகரங்கள்.

இவற்றை ராகம, வெலிசறையில் உள்ள பால்மா மீள அடைக்கும் தொழிற்சாலையில் (நீர்கொழும்பு வீதியில் 8 ம் மைல்) வழக்கமான அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

கேள்விப் பத்திரப் படிவங்கள் ராகம, வெலிசறையில் உள்ள பால்மா மீளவடைக்கும் தொழிற்சாலையின் கணக்காளரால் 1970 ம் ஆண்டு செத்தெம்பர் 24 ம் திகதி பிற்பகல் 3 மணி வரை மீளப் பெறக்கூடிய கட்டுப்பணம் 250 ரூபா செலுத்துவோருக்குக் கொடுக்கப்படும்.

ஏனைய விபரங்களை ராகம வெலிசறையில் உள்ள பால்மா மீள வடைக்கும் தொழிற்சாலையின் வர்த்தக முகாமையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

*தலைவர்,*
*பாற் சபை.*

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
33, எலிபாங் தெரு,
கொழும்பு 5,
1970 ம் ஆடு செத்தெம்பர் மீ 4 ந் உ.

9-472—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## இலங்கை அரச கடற்படை

**இலங்கை அரச கடற்படை, திருகோணமலை-வேலைப்பகுதிக்குத் தேவையான பொருட்கள் வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்கள்**

பின்வரும் வேலைப்பகுதிப் பொருட்களைத் திருகோணமலை டொக் யாட்டிலுள்ள இலங்கை அரச கடற்படை வேலைப்பகுதிக்கு வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 12 மணி வரை கொழும்பு-1, தபாற் பெட்டி இலக்கம் 593, இலங்கை அரச கடற் படைத் தலைமை அலுவலகம், கடற் படைத் தளபதியால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| செங்கட்டிகள் | ... | 175,000 கட்டிகள் |
| சுணைச்சுண்ணாம்பு | ... | 555 அந்தர் |
| ஆற்று மணல் | ... | 175 கியூப் |
| ½ அங்குலம் உடைத்த கல் | ... | 10 கியூப் |
| ¾ அங்குலம் உடைத்த கல் | ... | 40 கியூப் |
| 1 அங்குலம் உடைத்த கல் | ... | 25 கியூப் |
| 1½ அங்குலம் உடைத்த கல் | ... | 25 கியூப் |
| 9 அங்குலம் உடைத்த கல் | ... | 8 கியூப் |

2. மேற்கூறப்பட்ட நேரத்தில் கேள்விப்பத்திரங்கள் பார்க்கப் படும்போது விண்ணப்பக்காரர்கள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு-1, தபாற் பெட்டி இலக்கம் 593, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகம், கடற்படைத் தளபதியால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களில் இரு பிரதிகளில் விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரக் கட்டுப்பணமான ரூபா 75/- க்குரிய பற்றுச் சீட்டைக் காட்டி கேள்விப்பத்திரம் அனுப்புவதற்குரிய கடைசித் திகதிக்கு முதல் நாள் பிற்பகல் 12 மணிவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கட்டுப் பணம் இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தில் கடற்படைத் தளபதியின் பெயரில் காசுகட்டளையாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் பணமாகவோ நேரில் செலுத்தப்பட வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்வியாளர் இதன்கீழ் கையொப்பம் இட்டிருப்பவருடன் குறிக்கப்பட்ட பொருட்களை வேண்டிய நேரத்தில் வழங்குதற்கு இணங்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட வேண்டும். இவ்வொப்பந்தத்தின் விதிகளுக்கமையப் பொருட்களை வழங்க மறுத்தாலோ அல்லது வழங்க முடியாவிட்டாலோ சம்பந்தப்பட்டவர் தமது கட்டுப்பணத்தை இழப்பதோடு, கட்டுப்பாடுகளை மீறிய கொந்தராத்துக்காரரின் பட்டியலிலும் அவர் பெயர் சேர்க்கப்படும்.

6. கேள்வியாளர் மேற்கூறப்பட்டுள்ள பொருட்களின் மாதிரிகளை வேண்டப்படும்போது சமர்ப்பிக்க வேண்டும். குறிக்கப்பட்ட உடைத்த கல் மிக உயர்ந்த தரமுள்ளதாய் இருப்பதுடன் அரசாங்க வேலைப்பகுதியின் வேலைமானத்திட்ட விபரக் கூற்றுக்கு அமையாவிட்டால் ஏற்க மறுக்கப்படலாம்.

7. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது எல்லாவற்றையும் நிராகரிக்கவோ அன்றி ஒரு பகுதியை மட்டும் அங்கீகரிக்கவோ கடற்படைத் தளபதிக்கு முழு அதிகாரமுண்டு.

8. அங்கீகரிக்கப்பட்ட கேள்வியாளர் அப்பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள முழுப் பொருட்களின் தொகையின் 1/5 பங்கை 14 நாட்களுக்குள்ளும் மிகுதியை வேண்டும்போதும் ஒப்பந்தத்தின் விதிகளுக்கமைய வழங்கவேண்டும்.

9. இதற்கு மேலும் தேவைப்படும் விபரங்களைக் கொழும்பு-1, தபாற் பெட்டி இலக்கம் 593, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தில் பெறலாம்.

டீ. வீ. ஹன்ரர்,
பதில் கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு-1.
30.8.1970

9-402—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## கிழக்குப் பிராந்தியம்—மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு "கெயர்" பால் விசுக்கோத்துக்களை ஏற்றிக் கொடுத்தல்—1970/71

1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதிவரை நடைபெறும் கீழ்க்காணும் சேவைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் (இரட்டைப் பிரதியில்) மட்டக் களப்பு கல்வி அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5 ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்தில் இருந்து கீழே குறிப்பிடுவனவற்றில் அடைக்கப்பட்ட விசுக்கோத்துக்களை கிழக்குப் பிராந்தியப் பாடசாலைகளுக்கு ஏற்றிக் கொடுத்தல்.

" இட்டத்தட்ட 20 இறுத்தல் விசுக்கோத்துக்களைக் கொண்ட நீள்சதுர " காட்போட் " அட்டைப் பெட்டிகள் "

**கீழே குறிப்பிட்ட இடங்களுக்காகத் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**மட்டக்களப்பு உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத் திலிருந்து**

மட்டக்களப்பு மாவட்டம் :
(1) மட்டக்களப்பு வடக்கு, கல்குடா வட்டாரங்கள்.
(2) மட்டக்களப்பு தெற்கு, பட்டிருப்பு வட்டாரங்கள்.

கல்முனை மாவட்டம் :
(3) கல்முனை, நிந்தவூர் வட்டாரங்கள்.
(4) பொத்துவில் வட்டாரம்.

அம்பாறை மாவட்டம் :
(5) அம்பாறை வட்டாரம்.

**திருகோணமலை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத் திலிருந்து**

திருகோணமலை மாவட்டம் :
(6) திருகோணமலை வட்டாரங்கள்
(7) மூதூர் வட்டாரங்கள்.

2. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிவரையும் விநியோகிக்கப்படும். மட்டக்களப்பு கல்வி அலுவலகத்திலோ அல்லது எந்தக் கச்சேரியிலோ ரூபா 100 கட்டுப்பணமாகக் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தால்தான் ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப் படும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திரத்திற்காக கட்டுப்பணம் கட்டுவதினின்று விலக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி, நேரம், கேள்விப் பத்திரதாரருக்கு பின்னர் அறிவிக்கப்படும். பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விப்பத்திரகாரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப் படுவர்.

4. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திருப்தி கொள்ளும் வகையிற் குறைந்தது 10,000 ரூபா பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனத்தின் உரிமையாளரென்று அந்த இடத்தின் காரியாதிகாரியிடமிருந்து சமீபத்தில் பெறப்பட்ட ஒரு பெறுமதிக் கடிதமும் தனது பெயரில் பதியப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் ஒவ்வொரு லொறியாகுதல் அவருக்கு உண்டென்றும், அவை நடப்புவருட லைசன்ஸ் கொண்டிருக்கின்றன என்றும் பத்திரங்கள் மூலம் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன மேற்கண்ட சேவைகளுக்கான ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். எனினும் கேள்விப்பத்திரம் வழங்குமுன் இச்சங்கங்கள் முறையே கூட்டுறவுச் சங்க ஆணையாளர், கிராம அபிவிருத்திச் சங்க அதிபர் அல்லது தொழில் ஆணையாளர் ஆகியவர்களில் உரியவர்களிடமிருந்து இச்சேவைகளைச் செய்வதற்கு குறிப்பிட்ட ஒரு சங்கம் தகுதியுள்ளது என்றும், ஒரு லொறி சொந்தமாக வைத்துள்ளது என்றும் அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். லொறியின் பதிவுப் பத்திரமும் நடப்பு வருட லைசன்சும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட தேவையான விஷயங்களைப் பூர்த்தியாக்கத் தவறும் விண்ணப்பதாரருக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன்பாக அவசியமென கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்குத் தோன்றினால் சேவையொன்றுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட லொறிகள் தேவையெனக் கேட்க உரிமையுண்டு.

5. கேள்விப் பத்திரங்களில் ஏதாவது ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது முற்றாக நிராகரித்துவிடவோ கேள்விச் சபைத் தலைவருக்கு உரிமையுண்டு. கேள்விப் பத்திரங்கள் தமது கேள்விகளை கேள்விப் பத்திரங்கள் முடிவடைந்த 6 கிழமைகளுக்குச் செல்லுபடியாக வைத்திருத்தல் வேண்டும்.

6. இது சம்பந்தமாக மேலும் விபரங்களுக்கு மட்டக்களப்பு கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

பி. ஈ. ஜி. மெண்டிஸ்,
கல்விப்பணிப்பாளர்.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு ஆவணி மீ 30 ந் உ.

9–375—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

### வித்தியா பகுதி

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி வரை வவுனியா கல்விக் கந்தோர் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| 1. வ/வெள்ளாமுள்ளிவாய்க்கால் அ. த. க. பா. | பாடசாலைக் கட்டடத்தைத் திருப்பிக் கட்டுதலில் மிகுதி வேலை |

மாவட்டக்குறியீடு
வ—வவுனியா மாவட்டம்

வித்தியா பகுதி—அங்கீகரிக்கப்பட்ட சங்கம்

ரூபா 8,500.00 ரூபா 8,500.00

2. இவ்வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைக்கு வித்தியா பகுதியில் பதியப்பட்டவர்களுக்கு 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை வவுனியா பிரதம கல்வி அதிகாரி அவர்களால் வழங்கப்படும். இவ்வேலைக்கு ரூபா 100/- கொழும்பு கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ அல்லது யாழ்ப்பாணம், மாநிலக் கல்வி அதிபதி கந்தோரிலோ கட்டியதாகப் பற்றுச்சீட்டு வவுனியா பிரதம கல்வி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் கந்தோர் (எஸ். டபிள்யூ.) கிளையிலோ அல்லது யாழ்ப்பாணம், மாநிலக் கல்வி அதிபதியிடமோ பெற வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்ட அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசன, பொது வேலைப்பகுதி, வித்தியாபகுதியில் குறிப்பில் தொடுக்கப்பட்ட தொகைக்குப் பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் வேலைவிபர மதிப்புப் பத்திரங்களை நிரப்ப வேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் வித்தியாபகுதி மதிப்பீட்டின் பிரகாரம் வீதம், தொகை, அளவு ஆதியவற்றுக்கமைய வேலைகளை ஏற்றுச் செய்யும் சம்மதத்தை கேள்விச் சபைக்கு அறிவித்தல் போதுமானது. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு விசேட கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். அப்படிவங்களிலேயே அச்சங்கங்கள் விண்ணப்பிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர இடு பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்படுவர். அவர்களுக்கு விசேட கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் குறிப்பிட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வவுனியா பிரதம கல்வி அதிகாரியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் வவுனியா பிரதம கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப் படம் பிற விபரங்கள் அறியலாம். கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்த தபால் மூலம் தலைவர், கேள்விச் சபை, வித்தியா கந்தோர், வவுனியா, என்று விலாசமிட்டு அனுப்பவேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப் பத்திரங்கள் தபால்மூலம் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப் பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு பிரதம வித்தியாதிகாரியின் கந்தோரிலுள்ள காரியாலய உதவியாளரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பகாரரின் பெயர், விலாசம் முதலியன குறிப்பிடல் வேண்டும்.

5. 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் வவுனியா வித்தியா கந்தோரில் திறக்கப்படும். அப்பொழுது விண்ணப்பகாரர்கள் பிரசன்னமாயிருக்கலாம். அவர்களுக்குக் கேள்விப் பத்திரத்தைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் விகித விபரங்களும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

6. கேள்விப் பத்திரங்களைப் பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வார காலத்திற்குத் தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. பரிசீலனைக்கென கேள்விப் பத்திரங்கள் கிடைக்கக் கூடியதாகவிருக்கும் வவுனியா வித்தியா கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. கூரைகளுக்கு ஓடுகள் பாவிக்க வேண்டிய கட்டடங்களில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஓடுகளே பாவிக்க வேண்டும். ஓடுகளின் தன்மையை ஆராயவேண்டிய அவசியமேற்படுமிடத்து விநியோகிப்போரின் செலவில் இலங்கை விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தில் செய்து கொள்ளலாம்.

வே. நடராஜா,
பிரதம வித்தியாதிகாரி, வவுனியா.

வித்தியா கந்தோர், வவுனியா,
1970 ம் ஆண்டு செப்டெம்பர் 11 ந் திகதி.

9-430—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

### நீர்ப்பாசன இலாகா
### அம்பாறை உப-பிரிவு

1970/71 நிதி வருடத்திற்கான அரசாங்கப் பொருட்களை மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து அம்பாறை உபபிரிவின் கீழ் உள்ள அம்பாரை, உகணை பண்டகசாலைகளுக்கு கொண்டு செல்லுவதற்கான (ஏற்றுவது இறக்குவதுடன்) கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. ரூபா 40,000/- மோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ இத்திணைக்களத்தில் பதிந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாரை அல்லது கல்முனை அல்லது செங்கலடி நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில், கடமை நேரங்களில் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர், தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒப்பந்தத்தில் வெளிப்படுத்த வேண்டும். இஃது அவ்வொப்பந்தக்காரர் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமா என்பதை நிர்ணயிக்க ஏதுவாக இருக்கும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவரின் அலுவலகத்திலோ, கச்சேரியிலோ கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50/- செலுத்தி, பற்றுச்சீட்டைக் காட்டினால் போதுமானது.

இக்கேள்விக்கான மேலதிக விபரங்கள் யாவையும் கீழ்க்குறியிடும் நீர்ப்பாசன பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. எம். சந்திரதாச,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அம்பாறை உப-பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாறை,
30.8.1970.

9-432—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## கடற்றொழில் திணைக்களம்

### என்ஜின் உள்ளதும் என்ஜின் இல்லாததுமான பாவிக்கப்பட்ட மீன்பிடி வள்ளங்களின் ஏல விற்பனை

1970.7.31 ந் தேதிய வர்த்தமானியில் பிரசுரமான, அளுக்கூருவை, நீர்கொழும்பு, இன்பருட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 1970.9.26 ந் தேதி நடக்கவிருக்கும் என்ஜின் உள்ளனவும்/என்ஜின் இல்லாததுமான பாவிக்கப்பட்ட 3½ தொன் வள்ளங்களின் ஏல விற்பனை ரத்துச் செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு நடாத்தப்படும் :—

| வள்ள எண் | என்ஜினின் இடம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| ரீ 51 | — | அளுக்கூறுவை, நீர்கொழும்பு | 12.10.1970 |
| ரீ 71 | — | அளுக்கூறுவை, நீர்கொழும்பு | |
| ரீ 103 | — | அளுக்கூறுவை, நீர்கொழும்பு | |
| எஸ். 78 | — | அளுக்கூறுவை, நீர்கொழும்பு | |
| எஸ்ஐசீ 67 | — | இன்பருட்டி, யாழ்ப்பாணம் | 10.10.1970 |

டபிள்யூ. பத்திரண,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1970 ம் ஆடு செப்ரம்பர் மீ 4 ந் உ.

9–457—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### ஏல விற்பனை

கொழும்பு—1, செயலாளர் கருமாலய வளவிலுள்ள போட் ஹவுஸ் பதிவேட்டு அறையில் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் 17 ந் திகதி மு. ப. 10.30 மணிக்குப் பின்வரும் பழைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பெறும். விற்பனவு முடிவடைந்த பின்னர் தேர்வுபெற்ற கேள்வுகாரர் அவ்விடத்தில் முழுப் பணத்தையும் செலுத்தி பொருட்களை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | சிமித் கரோனு கூட்டல் இயந்திரம் … … … | 1 |
| 2. | நிருமாண அளவு கருவி … … | 2 |
| 3. | சாளர மறைதுணி … … … | 1 |
| 4. | மைஒற்றி … … … | 2 |
| 5. | பிரஷ்கள் … … … | 1 |
| 6. | கல்வனைஸ்ட் வாளி (பழையது) … … | 5 |
| 7. | கைமுறிந்த கதிரைகள் … … | 7 |
| 8. | காகிதாதிகள் பெட்டி … … … | 1 |
| 9. | திகதி வைக்கும் பெட்டிகள் … … | 1 |
| 10. | நாட் பதிக்கும் முத்திரை … … | 4 |
| 11. | நீர் வடிகட்டிகள் (சேதமடைந்தது) … | 5 |
| 12. | கண்ணாடி பாட் … … .. | 2 |
| 13. | மைக்குப்பிகள் தாங்கியுடன் … .. | 1 |
| 14. | அகர வரிசை அட்டைகள் வைக்கும் தட்டு … | 2 |
| 15. | துளையிடுகருவி (1 துளை) (சேதமடைந்தது) … | 1 |
| 16. | துளையிடுகருவி (2 துளை) (சேதமடைந்தது) … | 4 |
| 17. | துளையிடுகருவி (4 துளை) (சேதமடைந்தது) … | 7 |
| 18. | மரச்சட்ட நிலைகள் … … | 2 |
| 19. | டீ. டீ ரீ தெளிக்கும கருவி (சேதமடைந்தது) … | 1 |
| 20. | தட்டுகள் (சேதமடைந்தது) … | 1 |
| 21. | அலுவலக உபயோகத்திற்கான சாதாரண தட்டுகள் (சேதமடைந்தது) … .. | 8 |
| 22. | உருக்காலான காசுப் பெட்டி (சேதமடைந்தது) … | 2 |
| 23. | தோற் பைகள் (சேதமடைந்தது) … | 1 |
| 24. | கொம்ரோமீட்டர் கருவி … . . | 1 |
| 25. | கெஸ்ரெற்னர் இயந்திரம் … … | 1 |
| 26. | கலிகட் ஓடுகள் … … | 60 |
| 27. | கரம் போட் … … | 3 |
| 28. | படம் வரை கருவி … … | 1 |

9-423—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## காட்டுத் திணைக்களம்—ஏல விற்பனை

மட்டக்களப்பு வட்டாரத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங்களைக் கொண்ட மரங்களும், கதவுகளும், ஜன்னல்களும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 20.9.70 காலை 10 மணிக்கு மட்டக்களப்பு பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏல விற்பனைக்கு முன்பதாகவே மரங்களைப் பார்வை இடும்படி கோரப்படுகின்றனர்.

ஏல விற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது மேற்கூறிய மட்டக்களப்பு பகுதி வட்டார வன அதிகாரி காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

ச. முத்தையா,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு, 19.8.70.

9-314—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## சுங்க விற்பனை

ஒரு இயந்திர வள்ளம் "லிஸ்டர்" பிளாக்ஸ்ரோன் 3 சிலின்டர் மிகவும் திறமையான நிலையில் உள்ளது. இவ்வள்ளம் 24.9.70 ம் திகதி காலை 11 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஊர்காவற்றுறை சுங்கக் காரியாலயத்தில் விற்கப்படும். கேட்டவிலையில் 25 வீதம் வைப்புப்பணம் ஏலமுடிவில் கட்டப்படல் வேண்டும். ஏலத் திகதியிலிருந்து 15 நாள் தவணையில் மீதிப்பணம் செலுத்தி வள்ளத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மா. ம. சுங்கம்,
யாழ்ப்பாணம்.

S. M. J. சேனாரத்ன,
யாழ் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

9-458—11. 9. 70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர். தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

### அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| | 11 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3 30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3 30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3 30 |
| ஒற்ரோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3 30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப | 3 30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12 00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ௵ மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.